


சிறுவர் பகுதி
யாழ்ப்பாண பொது நூலகம்
04 JUL 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Readers' Paradise

நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்

தலைநகரில் தலை நிமிர்ந்து நிற்கும் மாபெரும் புத்தக நிலையம்

# இஸ்லாமிக் புக் ஹவுஸ்

(வேறு கிளைகள் எதுவும் கிடையாது...)

www.ibh.lk

**ஒரே கூரையின் கீழ்**
**தமிழ், ஆங்கிலம், சிங்களம், அரபு மொழிகளில்...**

## ONLINE ORDERS & VPP ORDERS

- புனித அல்குர்ஆன் பிரதிகள்
- அகராதிகள்
- உளவியல் நூல்கள்
- தர்ஜுமாக்கள்
- கதைப்புத்தகங்கள்
- சமையல் புத்தகங்கள்
- இஸ்லாமிய நூல்கள்
- அல் ஹதீஸ் தொகுப்புக்கள்
- வரலாற்று நூல்கள்
- இலக்கியத் தொகுப்புக்கள்
- இலக்கண நூல்கள்
- கவிதைத் தொகுப்புக்கள்
- பாடசாலை துணை நூல்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- VCD/DVD



You Ring 011 573 6098 We Bring

அறிவுக் களஞ்சியத்தின் நுழைவாயில்...

**7 Days Open**

**Loyalty Card**
**Now Available**




புதிய நூல்களின் தகவல்கள் அறிய
f<space>ibhbooks என Type செய்து
40404 க்கு அனுப்புங்கள்.

IBH இன் இலவச விநியோகம் தற்போது உங்கள் வீடுகளுக்கே...
(நகர எல்லைக்குள் மாத்திரம்)



ரமழான் மாதத்திற்கான விஷேட நேரம்

அதிகாலை 7:00 மணியிலிருந்து மாலை 5:00 மணி வரை உங்களுக்காக திறந்திருக்கும்

**ISLAMIC BOOK HOUSE**
77, Dematagoda Road | Maradana | Colombo- 09
Web: www.ibh.lk | Phone: 0115 925935

வெளியீடு மொத்த விற்பனை பகுதி : 0115 736098, 0772518641
தபால் மூலம் நூல்களைப் பெற : 011 2684851
புனித அல்குர்ஆன் பிரதிகளை மொத்தமாக பெற : 0773171725

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AHARAM
அகரம்

எண்: 12 - ஜூன் : 2018 - எழுத்து: 06




பிரதம ஆசிரியர்
எம். றிஸ்வி ஸுபைர் M.Ed

**ஆலோசனைக் குழு**

**அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)**
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

**எம்.எச். எம். ஹஸன்** M.Ed
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவகம்)

**ஏ.ஆர்.எம். ஜிப்ரி** BEd, MEd

**அன்பு ஜவஹர்ஷா**
(ஓய்வு பெற்ற அதிபர்)

**துணை ஆசிரியர்**
**வ. முஹம்மத் நபீல்**

**தளக் கோலம்**
**எம்.ஐ.எம். ஹரீஸ்**

04 JUL 2018

**தொடர்புகளுக்கு:**

**அகரம்**
**77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை**
**கொழும்பு 00900**
**தொ.பே : 077 892 7350**
**பெக்ஸ் : 011 268 6030**
Web : www.aharam.lk
E.mail : aharamipc@gmail.com

**சந்தா விபரம்**

தனிப் பிரதி : 50/=
1 வருட சந்தா : 800/=
6 மாத சந்தா : 400/=

உங்களுடன் ஆசிரியர்...

# "Beat Plastic Pollution"

மனிதனைச் சுற்றியுள்ள இயற்கையின் மொத்த அம்சங்கள் "சூழல்" எனலாம். நாள்தோறும் நாம் காண்கின்ற எம்மைச் சுற்றியுள்ள சகல அம்சங்களையும் சூழல் என்பது குறித்து நிற்கும். அந்தவகையில் "சூழல்" என்பது உயிர்வாழும் அங்கிகளுக்கு இடையில் காணப்படும் நிலைமைகளின் மொத்த கூட்டு என வரையறுக்கப்படும். சர்வதேச சமூகத்தின் சூழல் பற்றிய ஈடுபாட்டை இனங்காண ஐக்கிய நாடுகள் சபையினால் 1972 ம் ஆண்டு ஸ்ரோக்கம் நகரில் நடைபெற்ற முதலாவது சூழல் மாநாட்டைத் தொடர்ந்து பிரகடனப்படுத்தப்பட்ட உலக சூழல் தினமான ஜூன் 5 அனுஷ்டிக்கப்படுகின்றது. அந்த வகையில் இவ்வருடம் (2018) சூழல்தினத்தின் "பிளாஸ்டிக் மாசுகளை வெற்றிகொள்வோம்" **(Beat Plastic Pollution)** எனும் கருப்பொருளில் இத்தினம் நினைவுகூரப்படுகிறது.

இன்று வீட்டின் பாவனைப் பொருட்களின் பெரும்பகுதியை பிளாஸ்டிக் பொருட்கள் கைப்பற்றிவிட்டது. இன்றைய உலகம் எதிர்கொள்ளும் சூழல் சார் பிரச்சினைகளில் பிளாஸ்டிக் பொருட்களின் பாவனை முதன்மையானதாக கருதப்படுகிறது. எனவேதான், இவ்வருடம் சூழல் தினம் பிளாஸ்டிக் பொருட்களின் பாவனையால் ஏற்படும் சூழல் மாசடைதலை தடுப்பதற்கு விழிப்பூட்டுவதாக அமைந்துள்ளது.

இலங்கையில் நாளாந்தம் சேகரிக்கப்படும் குப்பைகளில் பத்து வீதத்துக்கு அதிகமானவை பிளாஸ்டிக்காக காணப்படுவது குறிப்பிடத் தக்கது. வீட்டுச் சூழலில், பாடசாலை சூழலில் நாம் வீசும் பிளாஸ்டிக் பொருட்கள் நீர், நிலம், வளி மாசடைவிற்கு காரணமாகிவிடுகிறது. குறிப்பாக பிளாஸ்டிக் பொருட்கள் மண்ணோடு சேர்ந்து உக்கலடைவதற்கு பல ஆண்டுகள் செல்வதுடன், பிளாஸ்டிக் கழிவில் வெறும் 7 வீதம் மட்டுமே மீள்சுழற்சிக்கும் உட்படுத்தப்படுகிறது.

மறுபக்கம், நாம் நாளாந்தம் பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்கள், மனித ஆரோக்கியத்திற்கும் பெரும் பாதகத்தை விளைவிக்கிறது. உதாரணத்திற்கு போத்தல்களில் அடைக்கப்பட்ட குடிதண்ணீரில் சூரிய ஒளி படுமாயின் இரசாயன மாற்றத்தை உருவாக்கி அது மனித உடலுக்கு தீங்காக மாறிவிடுகிறது. பிளாஸ்டிக் பொருட்களில் அடைக்கப்பட்ட சூடாக உணவை வைக்கும் அதில் காணப்படும் இரசாயனங்கள் கரைந்து உணவுடன் கலந்து உடலினுள் சேர்ந்து உடல் கலங்களின் கலந்து நோய்க்கு வழிவகுக்கும்.

எனவே, எமது அழகான சூழலை நாசப்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களின் பாவைனைய இழிவளவாக்கும் முயற்சிகளை நாம் எமது வீடு, பாடசாலை, வகுப்பறைகளிலிருந்து துவங்க வேண்டும். இது தொடர்பான அவதானத்தையும் அறிவையும் அனைவருக்கும் வழங்குவதுடன் பிளாஸ்டிக் பாவனையினால் ஏற்படும் விளைவுகள் தொடர்பாக விழிப்பூட்ட வேண்டும். இவ்வாறான சிறு முயற்சிகளை நாம் இன்றே துவங்குவோம். அது நாளை எமது சூழலை பாதுகாப்பதற்கான தூரநோக்கான செயற்பாடாக அமையலாம்.

இப்படிக்கு
**அன்புடன் ஆசிரியர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்றுக் கதை

எட்டுத்திசைகளிலும் வெற்றி பெற்ற இஸ்லாம் அரேபியாவின் கடலையும் கடந்து வெளியேயும் பரவத் துவங்கியது. அருகில் இருந்தது ஆபிரிக்கா. அங்கு எண்ணற்ற மதங்களும் மூட நம்பிக்கைகளும் அளவுக்கு மீறி இருந்தன. கோத்திரம் கோத்திரமாக பிரிந்து தமக்குள் மோதிக் கொண்டிருந்தனர். ஆகவே, இருண்ட கண்டமான ஆபிரிக்காவிற்கும் இஸ்லாமிய ஒளியை பரிசளிக்க முஸ்லிம்கள் முன்வந்தனர்.

**உக்பா பின் நாபிஃ (ரழியல்லாஹு அன்ஹு)**

அந்த இளைஞர்தான் ஆபிரிக்காவிற்கு தனது படையுடன் புறப்பட்டுச் சென்றார். அவர் தலைமை தாங்கிச் சென்ற படையினரின் ஆன்மிக பலத்திற்கு முன்னால் யாராலும் தலைதூக்க முடியவில்லை. அனைவரும் தோற்று வீழ்ந்தனர். தொடர்ந்து படைகளுடன் சென்ற அவர் வட ஆபிரிக்கா முழுவதையும் கைப்பற்றி விட்டு அத்திலான்திக் சமுத்திரத்திற்கு வந்து சேர்ந்தார்.

கடற்கரையும் வந்து விட்டது. கம்பீரத்தின் அடையாளமாக இருந்த தனது குதிரையுடன் கடலுக்குள் நுழைந்தார் அவர். மார்பளவு கடலுக்குள் நுழைந்துவிட்டு வானத்தை அண்ணார்ந்து பார்த்து பின்வருமாறு கூறினார்:

''யா! அல்லாஹ்! என்னால் முடிந்தளவு தூரம் வந்து உன் மார்க்கத்தை பரப்பி விட்டேன். ஆனாலும், தொடர்ந்து செல்ல முடியாதவாறு எதிரே கடல் தடுக்கின்றது. இந்த கடலுக்கு பதிலாக எதிரே நிலப்பரப்பு இருந்தால் அங்கும் உந்தன் மார்க்கத்தை கொண்டு சென்றிருப்பேன்'' என கண்ணீர் உருக பிரார்த்தித்து விட்டு திரும்பி வந்தார்.



# இன்னும் இந்த பாதை நீளாதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்




''முஸ்லிம்களுக்கு இடையூறாக பாதையின் நடுவில் அமைந்திருந்த ஒரு மரத்தை வெட்டி அகற்றியதன் காரணமாக சுவன இன்பத்தில் புரண்டு கொண்டிருந்த ஒரு மனிதனைக் கண்டேன்'' என அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அபூஹுறைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள். (ஸஹீஹு முஸ்லிம்)

# பிறர் நலன் பேணுவோம்

ஏ.ஆர்.எம். ஸஜித் (இஸ்லாஹி)

சுவனத்தை இலக்காகக் கொண்டு இவ்வுலகில் வாழுகின்ற முஸ்லிம் உயர் பண்புகளையுடைய சமூக சேவகனாக இருப்பான். அவனது சமூக உணர்வையும் அதனால் மறுமையில் அவன் பெற்றுக் கொள்ளும் உயர் அந்தஸ்தையும் மேற்படி ஹதீஸின் மூலம் புரிகிறோம்.

அல்லாஹ் அலங்கரித்து வைத்துள்ள சுவனத்தை அடைந்து கொள்ள விரும்புவோர் இரு வகையான உரிமைகளை நிறைவேற்றுவது தொடர்பில் கரிசனையுடன் நடந்து கொள்ள வேண்டும். ஒன்று அல்லாஹ்வுக்கு ஆற்ற வேண்டிய உரிமை மற்றையது அடியார்களுக்கு ஆற்ற வேண்டியவை.

பிற முஸ்லிமுக்கு நாம் ஆற்ற வேண்டிய உரிமைதான் அவனது நலனில் நாம் கொள்கின்ற கரிசனையாகும். இதனை ஆரம்ப காலத்தில் ஸஹாபாக்கள் நபியவர்களிடத்தில் உறுதிப் பிரமாணமாகவே செய்துள்ளார்கள்.

ஜரீர் இப்னு அப்துல்லாஹ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ''நான் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் தொழுகையை நிலை நாட்டுதல், ஸகாத் கொடுத்தல் மற்றும் அனைத்து முஸ்லிம் களுக்கும் நலவு செய்தல் ஆகியவற்றுக்கு உறுதிப்பிரமாணம் செய்துகொண்டேன்.'' (புஹாரி, முஸ்லிம்)

இங்கு அடுத்தவருக்கு நலவு செய்து சமூக சேவகனாக வாழ்வது அடிப்படை அம்சங்களில் ஒன்றாக கணிக்கப் பட்டுள்ளது. அந்த வகையில் ஒரு முஸ்லிம் தனது சமூகத்தில் தன்னால் முடிந்தளவு ஆக்கபூர்வமான பணிகளை செய்து பிறர் துன்பம் போக்க முயற்சிக்க வேண்டும்.

மேலே இடையூறை ஏற்படுத்தும் மரம் எனக் கூறிய நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், மற்றொரு தடவை பாதையில் மனிதர்களுக்கு இடையூறு விளைவிக்கக் கூடிய அனைத்தையும் அகற்றிவிடுவது தர்மமாகும் என்றார்கள். (முஸ்லிம்)

இதன் மூலம் பாதையில் இடையூறாக அமையும் கல், முள், அழுக்குகள் போன்ற எதுவாயினும் அதனை அகற்றிவிடும் போது அதற்கரக சுவனம் பரிசாக வழங் கப்படுகின்றது.

இஸ்லாமிய சமூகம் பிறர் நலம் பேணு வது என்ற அடிப்படையில் நிர்மாணிக்கப் பட்டது. அது பிறருக்கு உபகாரம் செய் வதை தனது உறுப்பினர் மீது விதியாக்கி யுள்ளது. இதனால் பிறர் துன்பம் துடைப் பதை உளப்பூர்வமாக நேசிக்கும் சிறந்த சமூக சேவையாளர்கள் வாழும் ஒரு தேசம் உருவாகும்.

பிறர் துன்பத்தை உணரும் உயர் பண்பாடுகளை மனித உள்ளத்தில் விதைக் கக் கூடிய உயர்ந்த ஒரு மாதமான ரமழான் எம்மை வந்தடைந்து எம் உள்ளங்களை பல திசைகளிலும் பண்படுத்தியுள்ளது.

ரமழான் தந்த பயிற்சி மூலம் நாமும் பிறர் நலம் விரும்பி, கூட்டாகவோ தனியாகவோ சமூக சேவை புரியும் உள பக்குவத்தோடு வாழ்ந்து சுவனத்தில் மகிழ்ச்சியான வாழ்வை அனுபவிக்க இப்போதே செயற்படுவோம்.

**அல்மஸ்ஹூர்:** ஒவ்வொரு படிநிலையி லும் மூவர் அல்லது அதற்கு மேற்பட் டோரால் அறிவிக்கப்படும் ஹதீஸ்

**அல்அஸீஸ்:** ஒவ்வொரு படிநிலையி லும் குறைந்தது இரண்டு அறிவிப்பாளர் களால் அறிவிக்கப்படும் ஹதீஸ்

**அல்கரீப்:** அறிவிப்பாளர் வரிசை அதன் முழுத்தொடரில் ஓர் அறிவிப்பாளரைக் கொண்டமைந்த ஹதீஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அல்குர்ஆன் கூறும் விலங்குகளின் கதைகள்

தொடர் - 11

கிஸஸ் அல்ஹைவான் பில் குர்ஆன் எனப்படும் அல்குர்ஆன் கூறும் விலங்குகளின் கதைகள் என்ற நூலை அகரம் வாசகர்களுக்காக தொடராகத் தர உள்ளோம், இன்ஷா அல்லாஹ்.

அறபியில்: அஹ்மத் பஹ்ஜத் | மலையாளத்திலிருந்து தமிழில்: ஜெ. இஸ்ஹாக்

வேட்டையின்போது பல்வேறு ஒலி பற்றிய அறிவை நாம் அனுபவத்தில் பிரயோகிக்க வேண்டி இருக்கும். எனவே, அப்போது பெறுகின்ற அனுபவம் அப்படியே எமது ஞாபகத் தில் எப்போதும் வேட்டையின்போது மிதந்து வரும்.

முதல் வேட்டையின்போது எனது தம்பி எனது காதோடு குனிந்து ''அண்ணா! எனது மனத்தில் சற்றுப் பீதி உண்டு'' என்று சொன்னது இப்பொது போல எனக்கு நன்கு ஞாபகம் இருக்கின்றது.

''பயப்படுவதற்கு நீ என்ன நாயா?'' நான் கேட்டேன். அவன் சிரித்துக் கொண்டே கேட்டான். ''நான் எவ்வளவு பயந்தாங்கொள்ளி என்பதை நீ காண வேண்டாமா?'' நாங்கள் சிரித்துக் கொண்டே ஓடத் தொடங்கினோம். எங்களால் மறக்க முடியாத தினம்.

நாங்கள் ஒன்றுகூடி வேட்டையை எவ்வாறு ஆரம்பிப்பது குறித்து கலந்துரையாடத் தொடங்கினோம்.

ஒருவன் சொன்னான்: ''தூரத் தெரியும் அந்த மலைகளுக்கு அப்பால் மேய்ந்து திரியும் மலையாடுகளின் கூட்டம் உண்டு.''

''பெருத்த எலிகளின் ஒரு புற்றை நான் கண்டு பிடித்திருக்கின்றேன். அங்கு காவல் காரர்கள் யாரும் இல்லை'' வேறு ஒருவன் கூறினான்.

''மேற்கே தூரத்தில் ஆறு குதிரைகளை ஒருவன் வளர்த்து வருகின்றான். இரண்டு நாய்கள் மாத்திரமே காவலுக்கு உள்ளன'' மூன்றாமவன் சொன்னான்.

நான் அவர்களுடைய கண்களை உயர்த்தி நோக்கினேன். பிறகு சொன் னேன்: ''வடக்குத் திசையில் கால்நடை களை மேய்த்துத் திரியும் 10 நபர்களின் ஒரு கூட்டம் உண்டு. முகாமிட்டு அவர் கள் தங்கியிருக்கிறார்கள். ஆடுகளும் மாடுகளும் பெரும் எண்ணிக்கையில் உண்டு. ஆறு நாய்களே அவற்றுக்குக் காவல். அவர்கள் போதியளவு ஆயுதங் களும் தரித்திருக்கின்றார்கள்!.''

நான் விபரித்த இரை பற்றிய விடயமே அனைத்திலும் கடினமானது. இருந்தும்

# யூஸுப் நபியின் ஓநாய் 06





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சவாலாக இருந்த அதனையே எல்லோரும் தேர்ந் தெடுத்தனர். வேட்டைக்குப் புறப்படும் நேரத்தை நள்ளிரவு எனத் தீர்மானித்தோம்.

அந்தி புலர்ந்ததுடன் நாங்கள் பாலைவனத்தில் இறங்கினோம். வழிகாட்டிக் கொண்டு நான் எனக்கு பொறுப்பாக்கப்பட்ட இரு இளம் ஓநாய்களுடன் முனனே நகர்ந்தேன். ஒரு நீண்ட ஓநாய் கூட்டம் மெதுவாக ஓடிக் கொண்டிருந்தது. அதன் ஒரு முனையில் இரு இளம் ஓநாய்களும்.

பூமியெங்கும் செவ்வர்ணம் பரவிக் கொண்டி ருந்தது. மெல்ல மெல்ல அந்தி சூழ்ந்தது. நாங்கள் அப்பாலைவெளிகளினூடே தொடர்ந்து சென்று கொண்டிருந்தோம். பூமியின் மீது இப்போது சாம் பல் வர்ணம் மூட ஆரம்பித்தது. நாங்கள் ஒரு மலை அடிவாரத்தை அணுகிக் கொண்டிருந்தோம். இருள் எண்ணும் ஈயக்கறுப்பு வர்ணம் சூழ ஆரம்பித்தது. யூஸுஃப்பின் சகோதரர்களின் மணத்தை நான் மோப்பம் பிடித்தேன். நான் நின்றதனால் முழு ஓநாய் கூட்டமும் நகராது அப்படியே நின்றது. என் னோடு வந்த சிறு ஓநாய்கள் 'ஏன் நின்று விட்டீர் கள்?' என்று என்னிடம் வினாவினர். ஏதோ கூடாத ஒன்றை நான் உணர்வதாக அவர்களுக்குத் தெரியப் படுத்தினேன்.

இந்த இரவுடன் இவர்களை மீண்டும் காண மாட்டேனோ!' என்று எனக்குத் தோன்றியது. இளம் ஓநாய்களோ தமது முதல் வேட்டை ஆரம்பிக்கப் போவதையிட்டு குதூகலப் புன்னகை புரிந்தார்கள். நானும் அவர்களுடன் சேர்ந்து எமது இலக்கை நோக்கி முன்னேற முன்னால் குதித்தேன். அவர் களது கூடாரத்தை நோக்கி மிகவும் எச்சரிக்கையுடன் நாங்கள் சூழ்ந்து நெருங்கினோம்.

பத்து சகோதரர்களும் கூடாரத்துக்கு வெளியே அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தார்கள். நாயைக் காணவில்லை. 'காவல் இல்லாமல் தமது ஆடு களையும் மாடுகளையும் ஏன் தனியாக விட்டிருக் கிறார்கள்?' சந்தேகக் கோடு என்னுள் எட்டிப் பார்த்தது.

எனது சந்தேகம் சக தோழர்களை நோக்கி ''எச்சரிக்கை! எச்சரிக்கை!'' எனப் பேச வைத்தது. ''உண்மையில் இவர்கள் உறங்குவதாகத் தெரிய வில்லை!'' இவ்வாறு எச்சரிக்கை செய்தபோது சகபாடிகளில் ஒருவன் சொன்னான். ''நேசரே! உங்களுக்கு என்ன இவ்வளவு பயம் இன்று?''

''எங்காவது ஓர் இடத்தில் எம்மைப் பிடிக்க கண்ணி வைத்திருப்பார்கள். எனவே, ஒரு கணமா வது கவனக் குறைவாக நடந்து கொள்ளாதீர்கள்.''

மற்றவர்களுக்கு எச்சரிக்கை செய்த வண்ணம் நான் சென்று கொண்டிருந்தாலும் இளம் ஓநாய்கள் அவற்றை அவ்வளவு அலட்டிக் கொள்ளவில்லை. பசுக்களின் மிக அருகில் அவை பாய்ந்து செல்ல முற்படுவதை தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு எனக்கு இருந்தது. அந்த அவசரத்தில் எச்சரிக்கை யெல்லாம் எனக்கு ஞாபகம் வரவே இல்லை. நான் பாய்ந்து அவர்களைத் தடுத்து நிறுத்த முயற் சித்தேன்.

''அந்தோ! என்ன நடந்தது?...'' என்னால் சுதந் திரமாக முன்னால் நகர முடியவில்லை.

ஆம்! அவர்கள் விரித்த வலையில் நான் நன்றாக அகப்பட்டுக் கொண்டேன். நான் எச்சரிக்கை ஒலியை எழுப்ப அது ஒருவரில் இருந்து மற்ற வருக்கு என தொடர்ந்து ஒலிக்க ஆரம்பித்தது.

எல்லாம் ஒரு நொடியில் நடந்து முடிந்து விட்டது. உறங்குவதுபோல் பாசாங்கு செய்த யூஸுஃப்பின் சகோதரர்கள் இப்போது கையில் ஆயுதங்களுடன் எழுந்து ஓடி வந்தனர். ஓநாய்களை நோக்கி அம்பு கள் பறந்தன. ஓநாய்கள் அவற்றில் இருந்து தப்பும் நோக்குடன் தூர ஓடிப் போயின. ஊளைச் சத்தம் எங்கும் நிறைந்தது.

என்னாலோ அசைய முடியவில்லை!. பத்துப் பேரும் கையில் தடிகளும் கயிறுகளும் சகிதம் என்னை நோக்கி வந்தனர். என்னை வலிமையான கயிறுகளினால் கட்டி கம்புகளினால் அடித்தனர். நான் துவண்டு வீழ்ந்தேன்.

12 ஆம் பக்கம் பார்க்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## வரலாற்றில் வாழ்வோர் 06

# ஆசிரியர்களின் ஆசான்

# மௌலவி தாஸீன் நத்வி (ரஹ்) - (1932-1977)

✍ வ. முஹம்மத் நபீல்

கொளுத்தி விடு சத்தியத்தீ!
கொழுந்து விட்டெரியட்டும்!

அழுத்திச் சொல்! அல்லாஹ்வே;
அவனன்றி எவர்க்குமஞ்சோம்!

பழுத்த கலை ஞானங்கள்
பண்புநிறை ஒழுக்கங்கள்
உளத்தில் தூய ஈமான்
உள்ளவரை, அச்சமேனோ!

-தாஸீன் நத்வி-



**ஆரம்ப வாழ்க்கை**

கடற்கரை கிராமம் கம்மல்துறையில் 1932 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 27ஆம் திகதி பிறந்தவர் கம்மல்துறை தாசன் என அறியப்பட்ட ஆளுமையான அறிஞர் தாஸீன் நத்வி. உதுமா லெப்ப மரிக்காரின் மகனான இவர் தரம் ஐந்து வரை கிராம பாடசாலையில் கற்று விட்டு அதன்பின் அல்லாஹ்வின் மார்க்க கல்வியை அட்சர பிசகின்றி ஆழமாக கற்க வேண்டும் என்ற உன்னத நோக்கோடு மகரகம கபூரியா மத்ரஸாவில் இணைந்தார். இந்த மார்க்க கல்விக்கான பயணம் இந்தியாவின் புகழ்பெற்ற நத்வதுல் உலமா கல்லூரியில் இணையும் வரை சென்றது.

ஏற்கனவே, இலங்கையில் அரபுமொழியிலும் அதன் இலக்கண விதிகளிலும் பாண்டித்தியம் பெற்றிருந்த தாஸீன் நத்வி இந்தியாவில் நத்வதுல் உலமா கல்லூரியில் புகழ்பெற்றார். அதன் அதிபரான உலக புகழ்பெற்ற மார்க்க அறிஞர் மௌலானா அபுல்ஹஸன் நத்வி அவர்களுடன் நல்லுறவை வளர்த்து அவரின் அன்பையும் அறிவையும் அனுபவத்தையும் பெற்றுக் கொண்டார். தம் கல்லூரி மீது அடங்காப் பற்று வைத்திருந்த அவர் ''பரந்த இஸ்லாமிய ஞானத்தை பறித்தெடுக்கும் பழத் தோட்டம்'' என அதனைப் பற்றி புகழ் பாடினார்.

**சமூகப்பணிகள் ஆரம்பம்**

தாயகம் திரும்பிய தாஸீன் நத்வி அவர்கள் கொழும்பு ஹமீத் அல் ஹுஸைனியாவில் ஆசிரியராக இணைந்தார். மார்க்க கல்வியையும் அரபு மொழியையும் மாணவர்களுக்கு கற்பித்த அவர் தனது ஓய்வு நேரங்களையும் மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பிப்பதில் முதலீடு செய்தார். அதனால் அவரது அறை எப்போதும் பாடசாலை மற்றும் பல்கலை மாணவர்களால் நிரம்பிக் காணப்பட்டது.

**எழுத்தும் பேச்சும் இணையற்ற ஆயுதங்கள்**

அதேவேளை தீவிர வாசிப்பு நேசகராக இருந்த அவரது நூலகத்தில் ஆங்கிலம், தமிழ், அரபு, உருது நூல்கள் ஆயிரக்கணக்கில் சேகரிக்கப்பட்டிருந்தன. எப்போதும் தனனை வளர்த்துக் கொள்வதில் கவனம் செலுத்தினார். அந்த அறிவுகளை எழுத்துக்களாலும் பேச்சுக்களாலும் வெளிப்படுத்தினார். அவரது எழுத்துக்கள் இந்திய மற்றும் இலங்கை இதழ்களில் வெளிவந்தன. அல்- இல்ம், ஷாஜஹான், உண்மை உதயம் போன்ற இதழ்களில் அவரது ஆக்கங்கள் வெளிவந்தன. 1952 இல் இருந்தே தினகரனிலும் சிந்தாமணியிலும் அவரது சிறுகதைகள் வெளிவந்துகொண்டிருந்தன. அவருடைய உரைகளைக் கேட்கவும் மக்கள் நூற்றுக்கணக்கில் குழுமினர்.

வானொலியையும் திறமையாக பயன்படுத்திய அவர் தொடர்ந்து ஓராண்டுக்கு மேலாக 'தித்திக்கும் திருமறை கதை கேளீர்' என்ற உரைநடையை வழங்கினார். அவரது கவிதைகளும் இசை சித்திரங்களாக வெளிவந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌலான மௌதூதி ரஹ்மதுல்லாஹ் அவர்களின் காதியானி பிரச்னை என்ற நூலை தமிழில் மொழிபெயர்த்த அவர் மௌலானா வஹீதுகான் அவர்களின் உர்து நூலை 'நவயுகத்தின் வாசலிலே' என்ற தலைப்பில் மொழிபெயர்த்தார்.

சிறிது காலம் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி யின் தலைவராக பணியாற்றிய அவர் இலங்கை வரலாற்றில் முதற் தடவையாக இலங்கை வானொலியில் குர்ஆன் வகுப்புக்களை உருவாக்கி சாதனை புரிந்தார். எகிப்து ஜனாதிபதியின் மரண அஞ்சலை தொடர்ந்து 12 மணித்தியாலங்கள் வாசித் தமை இன்றுவரை வரலாற்றுச்சாதனையாகவே இருக்கின்றது.

எகிப்துக்கு தன் உயர்கல்விக்காக சென்ற அவர் தனது எம்.ஏ. உயர்கல்வியை வெற்றிகரமாக பூர்த்தி செய்தார். அக்காலத்தில் சிறையில் அடைக்கப் பட்டிருந்த அறிஞர் செய்யித் குதுப் அவர்களை சந்திக்க அவரது குடும்பத்திற்கே அனுமதி மறுக்கப் பட்டிருந்த நிலையில் தனது புத்திசாலித்தனத்தால் அவரை சந்தித்து உரையாடினார்.

**நளீமியாவின் முதல் அதிபர்**

இலங்கை தேசத்தின் மகோன்னத எதிர்காலத்தை இலட்சியமாக கொண்டு நளீம் ஹாஜியாரால் உருவாக்கப்பட்ட ஜாமிஆ நளீமிஆ கலாபீடத்தின் அதிபராக இணைந்து தம் பணியை இரட்டிப்பு வேகத்துடன் கொண்டு சென்றார். நளீமியாவை உன்னத தரம் கொண்ட பல்கலைக்கழகமாக மாற்றுவதில் தம் ஒவ்வொரு நொடியையும் முதலீடு செய்து பாடுபட்டார். ஆனாலும் அல்லாஹ்வின் நாட்டம். அவரது 45ஆவது வயதிலேயே அல்லாஹ் அவரை தன்னிடம் அழைத்துக் கொண்டான். (1977 செப்டம்பர் 18)

தாஸீன் நத்வி அவர்கள் இணையற்ற அறிஞர், பன்னூலாசிரியர், கவிஞர், சொற்பொழிவாளர், ஆசிரியர், அதிபர், மொழிபெயர்ப்பாளர். இன்னும் இன்னும் ஏகப்பட்ட திறமைகளும் ஆற்றல்களும் அவரிடம் இருந்தன. அவற்றை தனது சமூகத்திற் காகவே அர்ப்பணித்தார். ஒரு சகலகலா வல்லவர். சரித்திரத்தின் யாத்திரையில் நட்சத்திரமாய் திகழ்பவர்.

---

**சிந்தனைக் கதை**

# உங்கள் மதிப்பு

ஒரு பிரபல பேச்சாளர் தனது ஒரு பேச்சின் ஆரம்பத்தில் கூடியிருந்த பார்வையாளர்களிடம் ஒரு நூறு ரூபாய் நோட்டைக் காண்பித்தார். ''இதைப் பெற்றுக்கொள்ள யாருக்கெல்லாம் விருப்பம் இருக்கிறது?'' என்று கேட்டார்.

பல பேர் கைதூக்கி விருப்பம் தெரிவித்தனர். இப்பொழுது அந்த நோட்டை தன் கைகளால் கசக்கினார். பின்னர் கேட்டார், ''இப்போது யாருக்கு இது வேண்டும்?'' இப்போதும் நிறைய பேர் கைதூக்கினார்கள்.

அவர் அந்த நோட்டை தரையில் போட்டுத் தன் காலணிகளால் மிதித்தார். மீண்டும் அதே கேள் வியை கேட்டார். மீண்டும் பல பேர் அதை வேண் டும் என்றார்கள்.

அவர் கூட்டத்தைப் பார்த்து, ''நண்பர்களே! நாம் இன்று ஒரு முக்கியமான பாடம் கற்றுக் கொண்டிருக்கிறோம்'' என்றார். ''நான் கசக்கிய போதும் மண்ணில் போட்டு காலணியால் மிதித்த போதும் இந்த ரூபாய் யாரும் வேண்டாம் என்று சொல்லவில்லை. அப்போதும் அதை வேண்டி விரும்பி எல்லோரும் கேட்டீர்கள். ஏனென்றால், கசங்கியபோதும் மிதிபட்டபோதும் அதன் மதிப்பை இழக்கவில்லை. அதன் மதிப்பு நூறு ரூபாய் தாள்'' என்று மேலும் கூறினார்.

''அதுபோலவே நாமும் பலமுறை நம் வாழ்வில் கீழே தள்ளப்படுகிறோம், மிதிக்கப்படுகிறோம், குப்பையாக ஒதுக்கப்படுகிறோம். நாம் மதிப்பில் லாதவர் மாதிரி உணர்கிறோம். ஆனால், எது நடந்தாலும் நமது மதிப்பு குறைவ தில்லை. நமக்கென்று என்ன மதிப்பு சேர்த்து வைத் திருக்கிறோமோ அது அப்படியே இருக்கும். இதை என்றும் மறவா தீர்கள்'' என்று கூறினார்.



அங்கு அமர்ந்திருந்த அனைவரும் தத்தமது மதிப்பை உணர்ந்தார்கள்.

சந்தர்ப்ப சூழ்நிலைகளால் ஏற்படும் அவமானங்களும் நிந்த னைகளும் தற்காலிகமானதே. நேர்மையான நன்மதிப்பு என்றும் குறைவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உலகிலுள்ள மிகப் பெரியவை



1. பெரிய தீவு - கிறீன்லாந்து
2. பெரிய பாலைவனம் - சகாரா
3. பெரிய நாடு - ரஷ்யா
4. பெரிய கண்டம் - ஆசியா
5. பெரிய சமுத்திரம் - பசுபிக்
6. பெரிய தீபகற்பம் - அரேபியா
7. பெரிய தீவுக் கூட்டம் - இந்தோனேஷியா
8. பெரிய வளை குடா - மெக்ஸிகோ
9. பெரிய பூங்கா - உட்பப் பல்லோ
10. பெரிய இராணுவம் - சீனா

✍ **எம்.ஆர். நஹ்லா**
**க/யஹலத்தன்னை மு.ம.வி. கண்டி**

## இலங்கையில் காணப்படும் நதிகளும் அதன் நீளமும் அது கடலில் சங்கமிக்கும் இடமும்

| நதிகள் | நீளம் | கடலில் சங்கமிக்கும் இடம் |
|---|---|---|
| மகாவலி கங்கை | 340 km | திருகோணமலை |
| களனி கங்கை | 145 km | கொழும்பு |
| களு கங்கை | 129 km | களுத்துறை |
| வளவ கங்கை | 137 km | அம்பலந்தோட்ட |
| மல்வத்து ஓயா | 167 km | சிலாவத்துறை |
| கலா ஓயா | 148 km | கற்பிட்டி |
| தெதுரு ஓயா | 143 km | சிலாபம் |
| மகா ஓயா | 134 km | கொச்சிக்கடை |
| பென்தர ஓயா | 73 km | பென்தொட |
| ஜிங்கங்கை | 113 km | ஜின்தொட |
| நில்வலா | 81 km | மாத்தறை |
| மாணிக்க கங்கை | 114 km | யால |

✍ **எம்.இஸட்.ஏ. சல்ஹான்**
**பு/கணமூலை மு.ம.வி.**
**கணமூலை**

## தத்துவ மொழிகள்

1. நீ எந்த இடத்திலிருந்து தூக்கி எறியப்பட்டாயோ அதே இடத்தில் வெகு சீக்கிரத்தில் அல்லாஹ் உன்னை உயர்த்தி வைப்பான்.
2. சோதிப்பது காலமாக இருந்தாலும் சாதிப்பது நீயாக இரு.
3. பிறக்கும்போது அம்மாவை அழ வைக்கிறோம். இறக்கும்போது எல்லோரையும் அழ வைக்கிறோம். வாழும்போதாவது எல்லோரிடமும் அன்பாக பழகுவோம்.
4. வலியும் வேதனையும் சொன்னால் புரியாது. பட்டால் தான் தெரியும்.
5. எழுந்து நின்றால் இமய மலையும் வழி கொடுக்கும். உறங்கி இருந்தால் சிலந்தி வலையும் சிறை பிடிக்கும்.
6. வாழ்க்கையில் நீ எதையாவது இழக்கும் போது தெரிந்து கொள்! வாழ்வில் நீ இழந்ததை விட சிறப்பான ஒன்றுக்காக வாழ்க்கை உன்னை தயார் செய்கிறது என்று.
7. தோல்வி நம்மை துரத்துகிறது என்றால் வெற்றி நம்மை நெருங்குகின்றது என்று அர்த்தம்.
8. கடனோடு காலையில் எழுவதை விட பட்டினியோடு இரவில் தூங்குவது மேல்.

✍ **எம்.எம்.ஏ ரஸா**
**பு/விருதோடை மு.ம.வி.**

## நாடுகளும் அவற்றின் தேசிய பறவைகளும்



1. டென்மார்க் - வானம்பாடி
2. பர்மா - பெண் மயில்
3. கனடா - வாத்து
4. கொலம்பியா - பருந்து
5. அமெரிக்கா - கழுகு
6. ஜேர்மன் - வெள்ளை கொக்கு
7. இங்கிலாந்து - ரொபீன்
8. தென் ஆபிரிக்கா - நீல கொக்கு
9. இந்தியா - ஆண் மயில்
10. இலங்கை - காட்டுக்கோழி

✍ **தௌபீக் ஹஸ்னி சுக்ரா**
**தி/மூதூர் அந்நஹார் ம.வி. மூதூர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தந்தையர்களும் துறைகளும்

1. சாரணர் இயக்கம் - பேடன் பவல்பிரபு
2. கணக்கியல் - லூக்கா பேசியோலி
3. கணினி - சாள்ஸ் பபேஜ்
4. கணிதம் - ஆக்கிமிடிஸ்
5. சமூகவியல் - மக்ஸ்வெபர், ஹொம்ரே
6. தட்டச்சு - கிறிஸ்தோபர், ஸதாம் ஹோல்ஸ்
7. தமிழ் தட்டச்சு - முத்தையா
8. ஆங்கில இலக்கியம் - சாசர்
9. பரிசோதனை முறை விஞ்ஞானம் - பிரான்ஸிஸ் பேக்கன்
10. மின்சாரம் - மைக்கல் பரடே
11. குடித்தொகை கல்வி - ஜோன் கிரான்ட்
12. பிரெய்ல் எழுத்து முறை - லூயி பிறைலி
13. அரசியல் - அரிஸ்டோட்டில்
14. கம்யூனிஸம் - கார்ள்மாக்ஸ்
15. நவீன ஓவியங்கள் - பிக்காசோ
16. கேத்திர கணிதம் - யூக்கிளிட்
17. மருத்துவம், மேற்கத்தேய மருத்துவம் - கிப்போகிறிட்டிஸ்
18. உள மருத்துவம் - சிக்மன்ட் புறொய்ட்
19. ஆயுர்வேத மருத்துவம் - சரகா
20. ஹோமியோபதி மருத்துவம் - சாமுவேல் ஹனிமன்



**ஹஜிஸ்தா ஹூஸைன்**
**கல்லஞ்சியாகம, காகம**

# உங்களுக்குத் தெரியுமா?

1. தண்ணீருக்கு அடியில் சென்று ஆராய்ச்சி செய்ய உதவும் மூச்சுக் கருவியின் பெயர் ஸ்கியூபா ஆகும்.
2. பிளாஸ்டிக்குகளை எரிக்கும்போது டையாக்சின் என்று நச்சுப் புகை வெளியாகிறது.
3. பாம்பு நாக்கின் மூலம் வாசனையை உணர் கிறது.
4. திரை அரங்குகளே இல்லாத நாடு பூட்டான்.
5. உலகிலேயே மிகப் பெரிய நூலகம் மொஸ்கோவில் உள்ள லெனின் நூலகம்.
6. உலகிலேயே துணியில் செய்தித்தாள் வெளி யிடும் நாடு ஸ்பெயின்.
7. உலகிலேயே மிக நீண்ட நாள் வாழும் மிருகம் முதலை. இவை 300 ஆண்டுகள் வரை வாழு கின்றன.
8. இரண்டு பிரதமர்களைக் கொண்ட நாடு சான்மரீனோ.
9. உலகிலேயே ஜனாதிபதிக்கு ஒரு வருடகாலம் பதவி கொண்ட நாடு சுவிட்சர்லாந்து.
10. நத்தைகளால் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் வரை நித்திரை கொள்ள முடியும்.
11. கரையான் ஒரு நாளைக்கு முப்பதாயிரம் முட்டை இடும்.
12. ஒட்டகம் 1 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் உள்ள தண்ணீரை எளிதாக கண்டுபிடிக்கும்.
13. பூனையின் கண்பார்வை மனிதனைவிட எட்டு மடங்கு கூர்மை வாய்ந்தது.
14. உலகிலேயே குளிர்ந்த இடம் சைபீரியா (ரஷ்யா)
15. உலகிலேயே வெப்பமான இடம் அசீசியா (லிபியா)

**எம்.ஐ.எப். இப்ராஹிய்யா**
**பு/தாரக்குடிவில்லு மு.ம.வி.**
**அக்கரவெலி, அகுனவில**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் ஆலிப் அலி (இஸ்லாஹி)
BA.(cey), Dip. in psychological Counseling.
www.aliaalif.tk / aalifali@gmail.com



# சூரியனைச் சுற்றும் சூரியகாந்தி

பலரும் அறிந்த ஒரு பூச்செடிதான் சூரியகாந்தி. ஆங்கிலத்தில் **Sunflower** என்று அழைப்பர். இப்பெயர் வரக் காரணம் சூரியகாந்திப் பூ சூரியனது தோற்றத்தில் இருப்பதாலாகும். இதன் அறிவியல் பெயர் ஹீலியாந்துஸ் **(Helianthus)**. கிரேக்க மொழியில் ஹீலியா என்பது சூரியனையும், ஆந்துஸ் என்பது பூவையும் குறிக்கும்.

சூரியகாந்தியின் தாயகம் வட அமெரிக்காவாகும். அமெரிக்காவின் கன்சாஸ் மாநிலத்தின் மாநிலப் பூவாகவும் இது விளங்குகின்றது. உக்ரேன் நாட்டின் தேசிய மலரும் சூரியகாந்திதான். பசுமைக் கொள்கையின் அடையாளமாக சூரியகாந்தி அடையாளப் படுத்தப்படுகின்றது. அத்தோடு உலகப் பிரபல ஓவியர் வான்கோவின் ஓவியங்களின் கருப்பொருளாக சூரியகாந்திகள்தான் அமைந்துள்ளன. இவ்வாறு சூரியகாந்திகள் எமது வாழ்வில் பிரதான இடத்தைப் பிடித்துள்ளன.

**தாவரத்தின் அமைப்பு**

சூரியகாந்தி செடிவகையைச் சேர்ந்தது. அதிலும் செடியினங்களிலேயே மிகவும் பெரியது இதுதான். சூரியகாந்திச் செடி 10 அடி உயரத்திற்கு வளரக் கூடியது. மிக வேகமாக வளரக் கூடிய செடியும்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இதுதான். சாதாரண மனித உயரத்தைவிட நான்கு அல்லது ஐந்து அடிகள் உயரமாக வளரும். அந்த உயரமான தண்டில் இலைகள் வளரும். செடியின் உச்சியில் பூப் பூக்கும். பூ 30 செ.மீ. அகலத்தில் இருக்கும். ஒரு செடியில் ஒரு பூ மாத்திரமே பூக்கும். ஆனால், ஆயிரக்கணக்கான சந்ததிகளுக்கான விதைகளை விதைத்துவிட்டே மடியும். சூரிய காந்திப் பூ ஒன்றை எடுத்து நோட்டமிட்டால் அதில் இன்னும் சின்னஞ்சிறிய ஆயிரக்கணக்கான பூக்களைக் கண்டுகொள்ளலாம். ஆக சிறு சிறு பூக்களாலான பெரிய ஒரு பூதான் சூரியகாந்திப் பூ.

### மகரந்தச் சேர்க்கை

அமெரிக்கா, ரஷ்யா, இந்தியா போன்ற நாடுகளில் இலாபமீட்டும் நோக்கில் ஏக்கர் கணக்கான நிலத்தில் சூரியகாந்திச் செடிகள் பயிரிடப்படுகின்றன. காய்ந்த விதைகளை மண்ணில் புதைத்து, பசளையும் நீரும் ஊற்றிப் பராமரிக்க வேண்டும். இரண்டு வாரங்களில் விதை பூமியுடன் மோதி வெளியே தலைகாட்ட ஆரம்பிக்கும். ஆறு மாதங்களில் எட்டு அல்லது 10 அடியைத் தொட்டு விடும். அதற்குள் மொட்டுக்கள் அரும்பி பூவாக மலர ஆரம்பித்திருக்கும். சூரியகாந்திப் பூ வந்ததும் அயன் மகரந்தச் சேர்க்கையை ஏற்படுத்தி அதிக விதை உற்பத்தி செய்யலாம். அதாவது ஒரு பூவை மற்றதொரு பூவுடன் உராயும்படி செய்ய வேண்டும்.

இதற்கு உகந்த பொருத்தமான நேரம் காலை 9 மணியிலிருந்து 11 மணிவரைதான். தொடர்ந்து 10 நாட்களுக்குள் இவ்வாறு செய்ய வேண்டும். விவசாய நிலங்களாக இருந்தால் அங்கு காற்றடிக்கும்போது பக்கத்து பக்கத்திலிருக்கும் பூக்கள் ஒன்றுடன் ஒன்று உராய்ந்து மகரந்தச் சேர்க்கை செய்து கொள்கின்றன. அல்லது தேன் பூச்சி, வண்டு, வண்ணாத்தி போன்றவற்றால் மகரந்த மணிகள் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு கடத்தப்பட்டு சேர்க்கை நடைபெறுகின்றது.

### சூரியகாந்தி விதைகள்.

சூரியகாந்திப் பூவின் நடுப்பகுதியை உற்று நோக்கினால் அங்கும் சிறிய சிறிய பூக்கள் இருப்பதை காணலாம். அவைதான் சூரியகாந்தி காய்ந்துபோகும்போது விதைகளாக மாறுகின்றன. சாதாரணமாக ஒரு சூரியகாந்திப் பூவில் 2000 வரையான விதைகள் காணப்படுகின்றன. பூக்களில் விதைகள் முதிர்ச்சி அடையும்போது பச்சைக் கிளிகள் அவற்றை உண்பதற்காக அலகால் கொத்தி சேதத்தை உண்டாக்கும். எனவே கிளிகளிடமிருந்து பாதுகாப்பதற்காக அவ்வப்போது தகரப் பெட்டிகளில் அடித்து சப்தம் எழுப்பி கிளிகளைத் துரத்துவார்கள் விவசாயிகள்.

சூரியகாந்தி விதைகளில் இரண்டு வகை உண்டு. ஒன்று கறுப்பு. மற்றையது வெள்ளைக் கோடுகளிடப்பட்ட விதை. சமையல் எண்ணெய்க்காக கறுப்பு விதைகள் பயன்படுத்தப்படுகின்றன. மாஜரீன் தயாரிப்பதற்காகவும் சிற்றுண்டிகள் செய்வதற்காகவும் வெள்ளை நிற விதைகள் பயன்படுத்தப்படுகின்றன. சூரியகாந்திகளிலும் வெவ்வேறு வகை இருப்பதனால் தாவர வகைகளுக்கு ஏற்ப விதைகளும் பூவின் நிறங்களும் வித்தியாசப்படுகின்றன.

### சூரியனைச் சுற்றும் சூரியகாந்தி

சூரியகாந்திப் பூவில் இருக்கும் அற்புதமே இதுதான். காலையில் கிழக்கு நோக்கும். மதிய நேரத்தில் நேராய் வானை அண்ணாந்து பார்க்கும். மாலையில் மேற்கை நோக்கும். சூரியன் மறைந்ததும் தலையைத் தொங்கப்போட்டு நிற்கும். இப்படி ஒவ்வொரு நாளும் சூரியனை எதிர்பார்த்துக் காத்திருந்து சூரியன் போகும் திசையெல்லாம் பின்துயரும் சூரிய காந்திப் பூக்கள் பெரியதோர் அற்புதம்தான். இங்குதான் அல்லாஹ் அவற்றுக்கு வழங்கியுள்ள இல்ஹாம் எனும் உள்ளுணர்வு உதிப்பு, வேலைசெய்கின்றது. அதுவல்லாமல் சூரியனைப் பின்தொடரவேண்டுமென்ற எந்த சுய புத்தியும் இல்லை அதற்கு. தாவரங்கள் ஒளித்தொகுப்பின் மூலம் உணவுற்பத்தி செய்துகொள்ள சூரிய ஒளி மிக அவசியம். அதிலும் சூரியகாந்திக்கு சூரிய வெப்பம் சரியாகக் கிடைத்தாக வேண்டும். அதனால்தான் வெப்ப வலயப் பிரதேசங்களில் சூரியகாந்தி நன்றாக வளர்கின்றது. எனவேதான், தனது முகத்தை சூரியனை நோக்கியே திருப்பிக் கொள்கின்றது. சூரிய காந்திச் செடியை நெருப்பிட்டுக் கொளுத்தினாலும் மீண்டும் அது தன் விதைகளைக் கொண்டு பீனிக்ஸ் பறவைபோன்று முளைத்து விடும். வெப்பத்தைத் தாங்கும் சக்தி அதற்கு உண்டு.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மருத்துவ நலன்கள்

உடலுக்கு தேவையான அனைத்து சத்துக் களையும் மருத்துவ பயன்களையும் சூரியகாந்தியின் முழுத்தாவரமும் உள்ளடக்கியிருக்கின்றது. சிறந்த மருத்துவ குணம் கொண்டவை. சூரிய காந்தி எண் ணெய்யில் கல்சியம், கொழுப்பு உட்பட பல்வேறு விதமான சத்துக்கள் அடங்கி உள்ளன. மேற்கு நாடு களில் 80 சதவீத சமையலறைகளை சூரிய காந்தி விதை எண்ணெய் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. விற்றமின்கள், அமிலங்கள், வேதிப்பொருட்கள் என அனைத்தையும் இவை தன்னகம் கொண்டுள்ளன. எண்ணெய் அதிக கொழுப்புச்சத்தை குறைக்கும். இரத்த அழுத்தம் கட்டுப்படுத்தப்படும்.

விதையில் உள்ள பொற்றாசியம் சத்து மிகுந்த, பயனளிக்கக் கூடியதாகும். ஒரு கோப்பை சூரிய காந்தி விதையில் ஆயிரத்து 300 மில்லி கிராம் பொற்றாசியம் காணப்படுவதாக உணவியல் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். இதன் விதை களில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய்யை உப யோகிப்பதன் மூலம் பக்கவாத நோய் தாக்குதலும், சிறுநீரகத்தில் கல் உருவாவதும் தடுக்கப்படுகிறது. சிறிதளவு சூரிய காந்தி விதையில் 32 சதவீதம் மெக்னீசியம் காணப்படுகிறது. இது நரம்பு செல் களை பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. தசை தொடர்பான நோய்கள் வராமல் தடுப்பதில் மெக்னீசியத்தின் பங்கு முக்கியமானது. இதயம் தொடர்பான நோய்கள், இரத்த அழுத்தம் போன்ற நோய்களையும் சூரிய காந்தி விதைகள் கட்டுப் படுத்துகின்றன. ஆஸ்துமா தொடர்பான நோய் களையும் குணப்படுத்துகின்றன.

சிகரட் பிடிப்பதற்கு அடிமையாகியுள்ளோரை அதிலிருந்து மீட்பதற்கு சூரியகாந்தி விதைகள் மிகவும் உபயோகமாகின்றன. கறுப்புத் தோல் நீக்கிய விதைகளைத் தினமும் உண்டுவந்தால் புகைபிடிக்கும் எண்ணம் கூட மாறும் என்று வைத் தியர்கள் கூறுகின்றனர். மலேரியா காய்ச்சலை போக்கக் கூடிய சிறந்த மருந்தாகவும் சூரியகாந்தி விளங்குகிறது. இப்படி மலர் எனப் பார்த்தால் அழகையும் மருந்தெனப் பார்த்தால் குணத்தை யும் தரும் அல்லாஹ்வின் அற்புதமானதொரு படைப்புதான் சூரியகாந்தி. நீங்களும் வீட்டில் நட்டிப் பாருங்களேன்!

---

05 ஆம் பக்கத் தொடர்...

## யூஸுப் நபியின் ஓநாய்

இவ்வாறு நான் சிறை பிடிக்கப்பட்டேன். எனது மனத்தில் காணாமல் போன எனது சகோதரனின் உருவம் மேலெழுந்து வந்தது. அவன் எப்படிக் காணாமல் போனான் என்று இப்போது எனக்குத் தெளிவாகி விட்டது. இப்படித்தான் அவனும் ஒரு மனிதக் கண்ணி வலையில் மாட்டியிருப்பான். எனது அருமைச் சகோதரா! உன்னைப் போல நானும் இதோ காணாமல் போகப் போகின்றேன்!

இளகிய தொனியில் நான் ஊளையிட ஆரம் பித்தேன். என்னை விதிக்கு விட்டுக் கொடுத்து அதனை ஏற்றுக் கொண்டு தூரத்துக்கு சென்று விடுமாறு எனது குடும்பத்திற்கு விடுத்த அறிவு ரையே அது. தாங்க முடியாத துக்கத்தின் வெளிப் பாடாக அவள் மறுஊளையிட்டாள். ''என்ன நடந் தாலும் பரவாயில்லை. உங்களைக் காப்பாற்ற இதோ நான் வருகின்றேன்'' என்பது அதன் அர்த்த மாகும். பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு தயவு செய்து திரும்பிச் செல்லுமாறு நான் அவளுக்கு மறுமொழி ஊளையிட்டேன். பிஞ்சுப் பையனை விஷேமாகக் கவனித்துக் கொள்ளுமாறு வஸியத்தும் செய்தேன். ஊளைகளின் எதிரொலியை பாலைவனம் விழுங்கிக் கொண்டது. எனக்கு மௌனமே மறுமொழியாகக் கிடைத்தது. நானோ கயிறுகளினால் கட்டுண்டு நிலத்தில் வீழ்ந்திருந்தேன்.

சற்று தலையுயர்த்தி என்னை கண்ணி வைத்து சிறைப்பிடித்தவர்கள் யார் என்று பார்த்தேன். சந்தேகம் இல்லை. அவர்கள் யூஸுஃபின் சகோ தரர்கள்தாம். என்னைச் சிறைபிடிக்கக் கிடைத்த தையிட்டு அவர்களுக்கு சந்தோஷமாக இருந்தது.

பலமான ஒரு தடித்த கம்பில் எனது கால்களை இறுகக் கட்டினார்கள். தலை கீழ் நோக்கித் தொங்க, என்னையும் தூக்கிக் கொண்டு கிராமத்தை நோக்கி அவர்கள் நடக்க ஆரம்பித்தார்கள்.

அவர்களில் ஒருவன் மகிழ்ச்சியான குரலில் சொன்னான். ''யூஸுஃபைக் கொன்று தின்ற ஓநாய் இதுதான் என்று யஃகூப் நபியிடம் எமக்கு இனிச் சொல்ல முடியும்''

**இன்ஷா அல்லாஹ் தொடரும்...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொரோக்கோ
# MOROCCO

வடக்கு ஆபிரிக்காவின் அலங்காரமாக மொரோக்கோ அமைந்துள்ளது. அத்திலான்திக் கடற்கரையில் அமைந்திருக்கும் இஸ்லாமிய நாடான மொரோக்காவின் அல்ஜீரியா, ஸ்பெய்ன், மொரித்தேனியா போன்ற நாடுகள் அமைந்துள் ளன. ஆபிரிக்க நாடுகளில் ஆபிரிக்க ஒன்றியத்தில் அங்கத்துவம் வகிக்காத ஒரே ஒரு நாடு மொரோக் கோவாகும்.

**வரலாறு**

கி.மு 8000 ஆண்டு வரலாற்றைக் கொண்டிருக்கும் மொரோக்கோ கி.பி 670 ஆம் ஆண்டு உக்பா பின் நாபிஃ எனும் மாவீரனின் தலைமையில் வந்த இஸ்லாமிய படையால் கைப்பற்றப்பட்டது. மொரோக்கோவின் பூர்வீக மக்களான வீரம் செறிந்த பர்பர் மக்கள் இஸ்லாத்தை ஏற்று விரைவிலேயே தமக்கான தனித்துவ அரசுகளை உருவாக்கிக் கொண்டனர்.

**புவியியல்**

அத்திலான்திக் கடல் மற்றும் மெடிட்டேரியன் கடல் ஆகிய நில வளங்களை கொண்டிருக்கும் மொரோக்கோவின் பெரும் பகுதி மலைத்தொடர்களாகும். அவற்றில் வட பகுதியில் காணப்படும் ரிப் மலைத்தொடர்கள் முக்கியமானவை. இவற்றுள் சஹாரா பாலைவனமும் உள்ளடக்கம்.

**மேலதிகமாக**

மலைவீழ்ச்சியை குறைவாக பெறும் மொரோக்கோ சுரங்கத் தொழிலில் இருந்து அதிக வருமானத்தை பெறுகின்றது. 21க்கு மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் இருந்போதிலும் பெண்களின் அறிவு வீதம் மிகக் குறைவாகவே உள்ளது. கிராமப்புறங்களில் பெண்களின் கல்வியறிவின்மை சில சமயங்களில் 90 வீதத்தை எட்டுகின்றது.





மன்னர்
ஆறாம் முஹம்மத்

| | |
|---|---|
| தலைநகரம் | - ரபாத் |
| பெரிய நகர் | - கசபிளாங்கா |
| ஆட்சி மொழி | - அரபு |
| பிரதமர் | - அப்பாஸ் எல் ஃபாசி |
| பரப்பளவு | - 4,46, 550 ச.கி. |
| மக்கள் தொகை | - 33 757 175 |






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Miss. Aysha Hassan

## Assalamu Alaikum
# my dear friends!!!

Hope you all are getting drenched in the rain of mercy and blessings! Yes I'm talking about the month in which we are in. This special month of Ramadhan is indeed one of the best gifts bestowed upon humanity by Allah.

Let's not waste even a minute of time in indulging in useless acts and unwanted behavior. As we read in our previous issues, we know that each and every second of time, is a blessing given to us from the almighty. This time will fade away within a blink of an eye. Thus, it is necessarily important for us to be vigilant and thoughtful whenever we are about to spend our minutes in states of utter idling.

With these thoughts instilled in your minds, let me move to something really thought provoking. Yes, without further beating around the bush let me directly open up the subject. Dear friends, have you ever experienced "departure" in your lives? Umm...I guess that some of you would have and the others haven't experienced yet. Anyway, we should understand that departure is a part and parcel of each and every one of our lives. There might be exceptionals, but generally all of us, in some way or the other is ought to experience departure in some point of our lives.

Some of you may have experienced departure when you are admitted to a distant school. You may be forced to depart yourself from your parents and from your home. What is funny is, that, the same you, would experience departure when you come back home once after you complete your studies. You would undergo the trauma of missing your friends. The same applies to college students and university students as well. Yes, so these are some kind of departures experienced by students. Yet, the bigger ones come when you are to do a job, get married, pursue higher education etc...

My dear friends, my intention in mentioning all these is to realize that departure is just a step of change in our lives that would probably take us to a different level. We are not supposed to stay in the same place where we were born, like stagnated water. In contrast to it, we are supposed to stand up, move, travel and embrace change. It is indeed crucial to keep in mind that change is a vital step in any one's life, to grow higher and higher.

Hence my dear friends, no matter how much you experience departure or how much changes you face in your lives, take them all as challenges. Face them with super confidence. Always remember that these are the stages and the steps for your success.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Hadith of the month

Narrated Anas bin Malik (Radi-Allahu 'anhu):

I heard Allah's Apostle (Sallallahu 'Alaihi Wa Sallam) saying, "whoever desires an expansion in his sustenance and age, should keep good relations

with his Kith and kin."

## *Giggle* a bit:



**Ahmed:** Which country has the highest population?

**Basheer:** Ireland. Everyday it's Dublin.

**Ahmed:** !!!

## Your Corner

# Courtesy



Courtesy means polite behavior towards others. Such behavior includes good manners and respectful attitudes towards others . In return, such people are admired and respected by society.

Being courteous does not require hard work or effort. We have only have to be aware and respectful of other people's feelings. Using expression like excuse me, thank you, i am sorry, please and you are welcome, is one way to show our courtesy. What is meant by courtesy can be summed up in the saying "treat others as you want to be treated"

Courteous people contribute greatly to build a good society. Their polite and respectful behavior often has a positive impact on others. Good manners tend to pass from person to person and influence the whole society.

**Thaski Fathima**

# The unlighted Night



The dark night with the moon glare
My soul comes out
When my soul is away from
one's desk, it's so frightened
When the pitch black cover the path
My soul formidable to prowl in beam
Then I heard some kind of wolves howl
Then my eyes were searching for aid,
In the unlighted night.
Then I saw brightness in a distance.
My legs started to chase the light with fright
Then my soul passed close over it
Then I wondered that it was the sunlight.

**Fazla Musthak**
**Hill country International school**
**Madawala, Kandy**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 10 successful Principles

- You are the only reason for your success.
- You don't have to invent the wheel.
- There is no progress without action.
- Persistence always wins.
- Focus is a necessary.
- Failure is necessary.
- Positivity fuels productivity.
- You must believe you can.
- Helping others is a big part of being successful.
- Success is a journey of countless baby steps.

**Raidha Fazal**
**P/Fathima B.M.V**
**Puttalam.**

# My Mother



My mother is one of the greatest persons in the world. She works hard to achieve her goals. She always takes care of me. She guides me well to do my works. She points out my mistakes and forgives me. She doesn't take anything serious. She always helps me in every moments in my life. I love my mother very much.

**M.T.F. Thashira**
**Mn/Put/Abdeen G.M.M.S**
**Puttalam.**

# My favourite sport



My favourite sport is cricket. It is a team sport. It originated in England. It is played by two teams. Each team has eleven players. It requires bats, balls, helmets, pads and wickets. An umpire has to judge the match. When one team bats, the other bowls. It is an interesting and enjoyable sport. Everyone likes cricket.

**M.M.musharraf**
**Co/ Al hikma college**
**Colombo - 12**

I'm eagerly waiting for your contributions with comments, stories, poems and essays. The best ones will be published insha Allah.
So write to me at

**I learn every day**

A 61/ 5 ,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யார் ஜீனியஸ்?

1. சர்வதேச சுற்றாடல் தினத்தின் தொனிப்பொருள் யாது?
2. எவரஸ்ட் சிகரத்தை அடைந்த இரண்டாவது இலங்கையர் யார்?
3. ஃபிபா உலகக்கிண்ணம் எந்த நாட்டில் நடைபெறுகிறது?
4. கனடா நாட்டின் தேசிய பறவை எது?
5. கனிணியின் தந்தை யார்?
6. உலகின் பரப்பளவில் கூடிய முதலாவது நாடு எது?
7. சூரிய காந்திப் பூவின் தாயகம் எது?
8. அறிஞர் தாஸீன் நத்வீ பிறந்த கிராமம் எது?
9. ஆபிரிக்கா கண்டத்திற்கு இஸ்லாத்தை அறிமுகப்படுத்திய வீரர் யார்?
10. உலகின் பெரிய தீவு எது?




**போட்டி**
**இல: 08**

## போட்டியின் நிபந்தனைகள்

01. தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கு பெறுமதியான புத்தக பரிசில்கள் அனுப்பி வைக்கப்படும்.
02. சரியான விடையை தபால் அட்டையில் மாத்திரம் எழுத வேண்டும்.
03. விடைகளை அனுப்பவேண்டிய முகவரி

**அகரம்**
No 77, Sri Vajiragnana mw
Colombo-09

04. போட்டி முடிவுத்திகதி 30.06.2018





## யார் ஜீனியஸ்?
## போட்டி இல- 06 முடிவுகள்

### பரிசுக்குரியவர்கள்

எம்.ஆர்.எப். அஸ்மா
அல் ஹஸன் வி. வேவெல்தெனிய

எம்.ஜே. ஸைனப்
மாத்தளை

ஏ. கதீஜா
அல் ஹிக்மா மு.ம.வி, நித்தவல்கால, குருணாகல்

### பாராட்டுக்குரியவர்கள்

எம்.டீ.எப். சதா – கொத்தாந்தீவு, முந்தல்
எம்.எப். மர்யம் – தங்கம, மாவனல்ல
டீ.எப். ராஸிதா – பன்னவ, கொபேகன
ஏ.எஸ்.ஏ. ராசீம் – அக்கரைப்பற்று 06
எம்.எல்.எம். சஹத் – மடவளை பஸார்
ஜே.எப். பெனாசிர் – ஷாபி நகர், மூதூர் 05
இபாத் இல்லியாஸ் – அடுலுக, பண்டாரகம
ஹம்தா ஸரீப் – மா/அஜ்மீர் தே.பா, உக்குவளை
எப். சிம்லா – மா/அஜ்மீர் தே.பா, உக்குவளை
எஸ்.எம். அபூசகீத், அக்கரைப்பற்று 06
ஆர். கதீஜா – பு/விருதோடை மு.ம.வி.
ஆர்.எப். ருக்ஷானா – நிக/பன்னவ மு.ம.க, கொபேகன
ஹிப்லா பஸீர் – நிக/பன்னவ மு.ம.க, கொபேகன
எம்.எஸ்.எப். அம்ரா – அல் அஸ்ஹர் ம.க, தெஹியங்க
எம்.எப். மப்ரா – ஸாஹிரா கல்லூரி, ஜிந்தொட்ட
எம்.எப். முஹம்மத், தங்கம, மாவனெல்ல
எம்.என்.எப். நஸ்ரா – பெலந்த, அகலவத்த
எம்.ஆர்.எப். ஆதிபா – க/அக்குரண மு.பெ.ம.வி, அக்குரண
ருகைய்யா பஸ்மில் – நிக/பன்னவ மு.ம.க, கொபேகன
எம்.எஸ்.எப். சமீரா – நிக/பன்னவ மு.ம.க, கொபேகன
எம். அஹ்ஸன் – வியாங்கல்லை, அகலவத்தை
எம்.எம்.எம். பாதிர் – பு/விருதோடை மு.ம.வி. மதுரங்குளி
ஏ.பீ.எப். பஹீமா – பாத்தமா ஸஹ்ரா பெ.அ.க, ஓட்டமாவடி
ஐ.ஏ. ஹஸ்மினா – கிண்/பாத்திமா பெ.ம.வி, முல்லிபொத்தான
எம்.ஐ.எப். ரிபாயா – உஸ்வதுன் ஹஸனா ம.வி, கடுகொட, காலி
எம்.எஸ்.எச்.எப். ஸைனப் – தொட்டவத்த, பாணந்துறை
எப். ஷிம்லா கல்தூம் ஹம்ஸா, இந்திரிலிகொட, மக்கொன
எம். ஆயிஷா – தாஹா நகர், மூதூர் 07
ஜே.எப். நுஹா – அன் நஹார் பெ.ம.வி, மூதூர் 02
எம்.எம்.ஏ அனீஸ் – வேவெல்தெனிய
எம்.என்.எப். சஹ்லா – அந்நூர் ம.க, பாணகமுவ, குருநாகல்
எம்.ஜே.எப். இஸ்ரா – நிக/பன்னவ மு.ம.க, கொபேகன
ஆர். ஹனீஸ் அஹமட் – பெ/அல் ரிபாய் மு.ம.வி. பொலன்னறுவ
எம்.எஸ்.எப். ஸம்ஹா – மடிகே மிதியால மு.ம.க, பண்டாரகொஸ்வத்த
கே.எப். சம்ஹா – ஹிஜ்ராபுர மு.ம.வி.
எம்.ஐ.எப். ரஹிமா – மல்கமன்தெனிய, அலவத்துகொட



சிறுவர் பகுதி
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# සිංහල පිටුව

**එම්.එස්.එම්. බත්ජාන් (Dip in Teaching)**
**ඩී. එස්. සේනානායක විදුහල**
**කොළඹ 07**

# අසරණයන්ට පිහිට වීම



අසරණ වූ මිනිසුන් බොහෝ ප්‍රමාණයක් අපේ රටේ සිටිති. අසරණයන් යනු යාචකයන් පමණක්ම නොවේ. යම් යම් අවස්ථාවලදී දුකට පත් තවත් පුද්ගලයන් සිටිය හැකිය. කෙනෙකුට අත දීමට කෙනෙකු නොසිටිය අවස්ථාවක කරදයකට ඇද වැටුණු විට ඔහු අසරණ වේ. එබැවින් එසේ අසරණ, දුගී තැනැත්තාට යම් කිසි සේවාවක් කිරිම අපේ යුතුකමකි.ස්වාභාවික විපත් නිසා දුකට පත් වුණු මිනිසුන් ඕනෑතරම් සිටිති.මානසිකව හා කයිකව ආබාදයට ලක් වූ මිනිස්සුද අසරණයන්ය. මෙවැනි මිනිස්සුන්ට උදව් කිරීම අගනා පුරුද්දකි.

යාචකයා නිසැකයෙන්ම අසරණ පුද්ගලයෙකි. ඔවුන්ගෙන් වැඩිමනත් දෙනා තමන්ගේ එදිනෙදා පැවැත්ම සඳහා රැකියාවල නොයෙදේ. එම නිසා ඔවුන්ට මුදල් උපයා ගැනීමට මඟක් නොමැත. ඔවුහු තමන්ගේ පවුලේ අසරණ වූ සාමාජිකයන් වෙනුවෙන් ආහාර, ඇඳුම් පැළඳුම් හා මුදල් ඉල්ලා යදිති. එම නිසා උදව්වක් ඉල්ලා ගෙන ඔවුන් අප වෙත පැමිණෙන විටදී උපකාර කිරීම අපගේ යුතුකමකි.

අපේ රට පොහොසත් රටක් නොවෙයි. තමන්ගේ දෛනික ආහාර වේල පවා සකස් කර ගැනීමට නොහැකි මිනිසුන් බොහෝ දෙනෙකු මෙහි සිටිති. තවත් සමහරුන්ට සිරුර වසා ගන්නට කිසිවක් නොමැත. සමහරුන්ට නිවාස නොමැත. අසරණ යාචකයෝ රාත්‍රී කාලය නගරයේ පදික වේදිකාවේ ගත කරති. සමහරක් වියපත් පුද්ගලයෝද අසරණත්වයට පත් වී සිටිති.

සමාජ සේවා දෙපාර්තමේන්තුව මේ අසරණ මිනිසුන්ට උදවු කිරීමට උත්සාහ දරයි. එය අසරණයින් කිහිප දෙනෙකුට සහනයක් වෙයි. බොහෝ අසරණ පුද්ගලයෝ රජය මගින් සමෘධි සහනාධාර ලබති.එ ඉතා සුළු මුදල ඔවුන්ගේ ජීවිකාව සඳහා ප්‍රමාණවත් නොවේ. ධනවත් පුද්ගලයන් උදවු කළ යුත්තේ මේ නිසාය.

අසරණ මිනිසුන් දෙස නිකමටවත් නොබලන ධනවත් පුද්ගයෝ බොහෝ සිටිති. ඔවුහු අඩුම තරමින් කෑමට ආහාරයක් වත් නොදී යාචකයන් එළවා ගනිති. එය ඉතාම නරක සිරිතකි. කුඩා දරුවන් ලෙස අපි අසරණයන්ට හැම විටම පිහිට වීමට උත්සාහ දැරිය යුතුයි.

**එම්. ෆයාස්**
**මින්හාජ් ම.වි. හපුගස්තලාව**

# මගෙ ගුරුතුමී

මගෙ ගුරුතුමිගේ නම ඩිලානි. ඇය මගෙ පන්තිභාර ගුරුතුමියයි. ඇය හරි හොඳයි. ඇය අපට පාඩම් කියාදීමට හරි දක්ෂයි. ඇය අපට ලස්සන සින්දුද කියා දෙයි. ඇය අපට රස කෑම ගෙනත් දෙයි. ඇයගේ උපන්දිනයට හා විශේෂ උත්සව අවස්තාවලදි, පාඩම් අවසානයෙදි ඇය අපගෙන් ප්‍රශ්න අසයි. මගේ ගොඩාක් යාලුවෝ ඇයට ගොඩක් කැමතියි. ඇය හරි ආදරනියයි. අපි සැවොම ඇයට සුබ අනාගතයක් පතන්නෙමු.

**එෆ්. සාරා**
**අස්හර් ම.ම.වි, අකුරණ**

# මා දුටු සීගිරිය

ඇතදීම සතුරන් දැක ගැනීමට කාශ්‍යප රජු තැනූ බල කොටුවයි. මේ එහි තිබෙන චිත්‍ර අප රට සිටි නිර්මාණකරුවන්ගේ දක්ෂකම ලොවම කියා පායි චිත්‍ර නරඹා වශී වූවන් කැටපත් පවුරේ ලියු කුරුටු ගී රැසකි. එය වටා ඇති දිය හා නල මාර්ග අද ඉන්ජිනේරුවන් පවා විස්මයට පත් කරවයි. ඒ පව්ව මුදුනෙ වු රජ මාලිගාවේ නටඹුන් අද ද දැකගත හැක. සීගිරිය නැරඹීමට එන දෙසි විදෙස් සන්චාරකයන්ගේන් නිතරම මෙය අතුරු සිදුරු නැතිව පිරි යයි.



**එම්.එම්. අර්කම්**
**සාහිරා ජාතික පාසල මාතලේ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# පොදු දේපල රැක ගනිමු

සෑම පුද්ගලයකුම තමන්ට පෞද්ගලිකව අයත් දේපල හොඳින් රැක බලා ගනිති. ප්‍රවේසම් කර ගනිති. එහෙත් පොදුවේ සෑම දෙනාටම අයත් දේපල ගැන කිසිම අයුරකින් රැක ගැනීමක් හෝ ඒ පිළිබඳව අවදානයක් හෝ නොදක්වති. පාසල් බස් රථය දුම්රිය නොමිලේ දෙන පාසල් පොත් පාසල් බංකු ගොඩනැගිලි රෝහල රජයට අයත් ආයතන මේ සියල්ලක්ම පොදු දේපල වේ. ඒවා රැක ගැනීම අප අපටම කර ගන්නා වූ යහපත් ක්‍රියාවලියකි. නො එසේ නම් ඒ දේපොල විනාශ වීමෙන් යථා තත්වයට පත්කර ගැනීමට අවශ්‍යය. මුදල් වැය වන්නේද අප වෙතින්ම ලබා ගන්නා බදු මුදල් මගිනි. ඒ බව අප බොහෝ විට අප නොදන්නා කරුණකි. රටක පොදු සම්පත විනාශ කිරිම නිසා රට දියුණුව කරා යන ගමනද පමා වේ. ඒ අනවශ්‍ය මුදල් නාස්තිය නිසාවෙනි. නොයෙකුත් අවස්ථාවල බස් රියේ දුම් රියේ යන අපගේ සහෝදර පාසල් සිසුන් එම ආසන කඩා දමයි. ඉරි ඇද ගී කුරුටු ලියා අවලස්සන කරයි.

මේ පොදු දේ විනාශ කරන්නන්ට විරුද්ධව පෝස්ටර් දැන්වීම් නාම පුවරු

සකසා සෑම දෙනාටම සෑම දෙනාවම දනුවත් කල යුතුය. පොදු දේපල වනසන පුද්ගලයින් අවිනිත අසන්වර දේශ ද්‍රෝහීන් බව එහි දැක්විය යුතුය. ඒ තුලින් හෝ පාඩමක් ඉගැන්වීම අනාගතයට වැඩදායකය පොදු දේපල විනාශ නොකර

ඒව රැක ගනිමු. එවිට අපත් රැකී රටත් රැකුනා කියා සතුටු විය හැක.

**එෆ්. නදා**
**ආමිනා ජාතික පාසල මාතලේ**



# කුඩයක් කතා කරයි

එදා ඉරිදා දවසක් මම මාගේ කුඩය සොයන විට පරණ පෙට්ටියක් තුළ කෙඳිරිගාන ශබ්දයක් මට ඇසුණි. මම ඒ පෙට්ටිය ඇරලා බැලුවෙමි එවිට ඒ පෙට්ටිය තුළ තිබුණු රතු පාට කුඩයක් කතා කිරීමට පටන් ගත්තේය. මා ද පුදුමයෙන් බලා සිටියෙමි.

මම ශ්‍රී ලංකාවේ 'කඳුරට' කුඩ නිෂ්පාදන කර්මාන්ත ශාලාවේ 2015-10-10 වෙනිදා ඉපදුනෙමි. මා සමඟ තවත් මිතුරන් බොහෝ දෙනෙක් නිෂ්පාදනය වුණෙමු. මම ගොඩක් දවස් එහේ සිටියේ නැහැ. මිතුරන් සමඟ අපව ගෝනිවලට දමා විවිධ පළාත් වලට යැව්වෝය. මම නුවරඑළිය දිස්ත්‍රික්කයට ගියෙමි එහිදී අපව කඩවල් වලට දැමුවෝය. මම 'රයන් සිටි' යන ලොකු වෙළඳසැලේ සිටියෙමි. එහි සිටියේ දවස් දෙකක් පමණි. පසුව ඔබගේ තාත්තා මාව මිළදී ගත්තේය.

මා ආපු අළුත මාව මලක් වගේ හැමෝම අරක්ෂා කළෝය. මාව අව්වට හා වැස්සට නිතරම පවුලේ අය රැගෙන ගියෝය. ටික දවසක් යනවිට ඔයාලා මාව ටිකින් ටික ඈත් කරන්න පටන්ගත්තෝය. ඒ අයුරින් මා දැන් පරණ කුඩයක් බවට පත්වුණෙමි ඔයාගේ අම්මා, ගේ දොර පිරිසිදු කරන එක් අවස්ථාවක මේ පරණ පෙට්ටියට දැම්මාය. ඒ දවස සිට මම මේ පෙට්ටිය තුළ ඉතාමත් කණගාටුවෙන් සිටින්නෙමි.

**නම එම්. එච්. එෆ්. හම්නා**
**පාසල මහ/තෙල්/හිජ්රාපුර මුස්ලිම් මහා විද්‍යාලය**
**ශ්‍රේණිය 10B**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி BA, PGDE)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

# அரபு மொழி, அரபு இலக்கிய நயம் | தரம் 10, 11

## செயற்படுபொருள் المفعول به

يَقْرَأُ الطَّالِبُ الْكُتُبَ, يَحْتَرِمُ الطُّلاَّبُ الْاَسَاتِذَةَ, يَعْبُدُ الْمُسْلِمُوْنَ رَبَّهُمْ. يَكْتُبُ الْوَلَدُ الرِّسَالَةَ, حَفِظَتْ فَاطِمَةُ الْقُرْآنَ, حَجَزَ عَامِرٌ مَقْعَدًا فِيْ الْحَافِلَةِ.

حَمَلَ الرَّجُلُ الْحَقِيْبَةَ , رَكِبَ الْمُسَافِرُ الْقِطَارَ, اسْتَذْكَرَتِ الطَّالِبَاتُ الدُّرُوْسَ, شَرِبَ الْمَرِيْضُ الدَّوَاءَ.

## இணைக்குக.

| الْأَسْئِلَةُ : | الْأَجْوِبَةُ |
|---|---|
| مَاذَا يَقْرَأُ الطَّالِبُ ؟ | حَجَزَ عَامِرٌ مَقْعَدًا فِيْ الْحَافِلَةِ |
| مَاذَا شَرِبَ الْمَرِيْضُ ؟ | حَمَلَ الرَّجُلُ الْحَقِيْبَةَ |
| مَاذَا اسْتَذْكَرَتِ الطَّالِبَاتُ ؟ | يَكْتُبُ الْوَلَدُ الرِّسَالَةَ |
| مَاذَا رَكِبَ الْمُسَافِرُ؟ | حَفِظَتْ فَاطِمَةُ الْقُرْآنَ |
| مَاذَا حَجَزَ عَامِرٌ فِيْ الْحَافِلَةِ؟ | يَحْتَرِمُ الطُّلاَّبُ الْاَسَاتِذَةَ |
| مَاذَا حَمَلَ الرَّجُلُ؟ | يَعْبُدُ الْمُسْلِمُوْنَ رَبَّهُمْ |
| مَاذَا يَكْتُبُ الْوَلَدُ؟ | رَكِبَ الْمُسَافِرُ الْقِطَارَ |
| مَاذَا حَفِظَتْ فَاطِمَةُ؟ | اسْتَذْكَرَتِ الطَّالِبَاتُ الدُّرُوْسَ |
| مَنْ يَحْتَرِمُ الطُّلاَّبُ؟ | شَرِبَ الْمَرِيْضُ الدَّوَاءَ |
| مَنْ يَعْبُدُ الْمُسْلِمُوْنَ؟ | يَقْرَأُ الطَّالِبُ الْكُتُبَ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்வரும் வாக்கியங்களில் உள்ள المفعول بهِ (செயற்படுபொருள்) சொற்களின் கீழ் கோடிடுக.

1. نَصَحَ أَحْمَدُ صَدِيقَهُ بِدِرَاسَةِ اللُّغَةِ الْعَرَبِيَّةِ
2. اِخْتَارَ الْأُسْتَاذُ التِّلْمِيْذَيْنِ لِأَدَاءِ الْحِوَارِ
3. اِشْتَرَى وَالِدِيْ السَّاعَتَيْنِ مِنَ الدُّكَّانِ
4. قَابَلَ الْوَزِيْرُ الْفَلَّاحِيْنَ
5. شَكَرَ الرَّئِيْسُ الْمُسْلِمِيْنَ
6. اِسْتَقْبَلَ الْآبَاءُ الْمُدَرِّسَاتِ
7. وَزَّعَ الْمُدِيْرُ الشَّهَادَاتِ عَلَى التَّلَامِيْذِ
8. الْحَسَنَاتُ يُذْهِبْنَ السَّيِّئَاتِ

## மொழி பெயர்க்குக.

1. மாணவிகள் பாடங்களை மீட்டுகின்றனர்.
2. பாத்திமா அல்குர்ஆனை மனனமிடுகிறாள்.
3. எனது தந்தை இரண்டு கடிகாரங்களை விலைக்கு வாங்கினார்.
4. மாணவர்கள் ஆசிரியைகளை வரவேற்றனர்.
5. நன்மைகள் பாவங்களைப் போக்கிவிடும்.

## பொருத்தமான சொற்களை கொண்டு இடைவெளி நிரப்புக.

الْجَرِيْدَةَ – الْأَمْثَالَ – الدَّرَّاجَةَ – الْحَقِيْبَةَ – اللَّبَنَ

حَمَلَ الْأُسْتَاذُ ......................

حَفِظَتْ فَاطِمَةُ ......................

شَرِبَ الْوَلَدُ ......................

قَرَأَ الطَّالِبُ ......................

رَكِبَتْ فَاطِمَةُ ......................

| | |
|---|---|
| الْجَرِيْدَةُ | பத்திரிகை |
| الْأَمْثَالُ | பழமொழிகள் |
| الدَّرَّاجَةُ | சைக்கிள் |
| الْحَقِيْبَةُ | பை |
| اللَّبَنُ | பால் |

## பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக

دَعَا الْمُدَرِّسُ ( التِّلْمِيْذَيْنِ , التِّلْمِيْذَانِ )

زَارَ الرَّئِيْسُ ( الْفَلَّاحِيْنَ , الْفَلَّاحُوْنَ )

سَاعَدَ الطُّلَّابُ ( الْمُدَرِّسَاتِ , الْمُدَرِّسَاتُ )

شَاهَدَ مُحَمَّدٌ ( الْمُسَافِرُوْنَ , الْمُسَافِرِيْنَ )

نَصَحَ إِمَامُ الْمَسْجِدِ ( الْمُسْلِمَاتُ , الْمُسْلِمَاتِ )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரந்து விரிந்திருக்கும் உலக நாடுகளை உற்றுப்பார்க்கும்போது ஓர் உண்மை தெளிவாக புரியும். சில நாடுகள் கடல்போல பரந்து விரிந்திருக்கின்றன. சில நாடுகள் கைப்பிடியளவு சுருங்கியிருக்கின்றன.**

**இங்கு, உலகின் பரப்பளவில் கூடிய நாடுகள் பற்றி கலந்துரையாட போகின்றோம்.**



## 10. அல்ஜீரியா

**2.38 மில்லியன் சதுர கிலோமீற்றர்**

மிகப் பிரமாண்ட பத்து நாடுகளுக்குள் உள்ளடங்கும் ஒரே ஒரு ஆபிரிக்க நாடு அல்ஜீரியாவாகும். வட ஆபிரிக்க பகுதியில் அமைந்திருக்கும் அல்ஜீரியாவின் பெரும்பான்மையான நிலம் பாலைவனமாகும்.



## 09. கஸகஸ்தான்

**2.72 மில்லியன் சதுர கிலோமீற்றர்**

வரண்ட மற்றும் ஈரழிப்பான பகுதிகளை கொண்டிருக்கும் கஸகஸ்தான் கடல் இல்லாத ஒரே ஒரு பிரமாண்ட நாடாகும்



## 08. ஆர்ஜென்டீனா

**2.78 மில்லியன் சதுர கிலோ மீற்றர்**

உதைப்பந்தாட்டம் மூலம் உலக புகழ்பெற்ற ஆர்ஜென்டீனா தென் அமெரிக்க நாடாகும். ஸ்பெய்னிய மொழி பெரும்பான்மையாக பேசப்படும் உலகின் ஒரே ஒரு பிரமாண்டமான நாடான இந்நாடு அத்திலாந்திக் கரையில் அமைந்துள்ளது.



## 07. இந்தியா

**3.29 மில்லியன் சதுர கிலோ மீற்றர்**

உலக சனத்தொகையில் இரண்டாம் இடத்தில் இருக்கும் இந்தியா வடக்கே மலைத்தொடர்களையும் தெற்கே அகன்ற சமவெளிகளையும் கொண்டமைந்துள்ளது.



## 06. அவுஸ்திரேலியா

**4.4 மில்லியன் சதுர கிலோ மீற்றர்**

மிகப் பெரும் சமவெளிகளையும் மேய்ச்சல் தரைகளையும் கொண்டமைந்திருக்கும் அவுஸ்திரேலியா தனிப் பெரும் கண்டமாகும்.




## 05. பிரேஸில்

**8.51 மில்லியன் சதுர கிலோமீற்றர்**

ஆர்ஜென்டீனா போன்றே உதைப்பந்தாட்டம் மூலம் புகழ் கொண்டுள்ளது. தென்னமெரிக்க நாடான பிரேஸில் உலகின் பிரமாண்ட நாடுகளின் பட்டியலில் 5ஆவது இடத்தை பிடிக்கின்றது. மிகப் பெரும் மழைக்காடான அமேஸன் இதன் மிகப்பெரும் இயற்கை வள கொடையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் பரப்பளவில் கூடிய 10 நாடுகள்



## 04. சீனா

**9.6 மில்லியன் சதுர கிலோ மீற்றர்**

எல்லையற்று நீளும் பெருஞ்சுவர் மூலமாக பிரபலமடைந்த சீனா உலகில் அதிகளவான சனத்தொகையை (1.35 பில்லியன்) கொண்டிருக்கும் தேசமாகும். 14 நாடுகளை எல்லைகளாக கொண்டிருக்கும். குறிப்பாக கட்டார் சனத்தொகையை விட சீனாவில் இருக்கும் மருத்துவர்களின் தொகை அதிகமாகும்.



## 03. ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**9.63 மில்லியன் சதுர கிலோமீற்றர்**

ஐம்பது மாநிலங்களை கொண்டமைந்திருக்கும் ஐக்கிய அமெரிக்க நாடுகள் சனசெரிவான அதிநவீன நகரங்களையும் மறுபக்கம் ஆளரவமற்ற பள்ளத்தாக்குகளையும் கொண்டமைந்துள்ளது.



## 02. கனடா

**9.984 மில்லியன் சதுர கிலோமீற்றர்**

மிகப் பெரிய பிரமாண்ட நாடுகளின் பட்டியலில் இரண்டாவது இடத்தை பெற்றிருந்தாலும் கனடாவின் சனத்தொகை மிகவும் குறைவாகும். ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 4 என்றே இந்த எண்ணிக்கை அமைகின்றது.



## 01. ரஷ்யா

**17. 1 மில்லியன் சதுர கிலோமீற்றர்**

உலகின் பிரமாண்ட நாடுகளின் பட்டியலில் முதலிடத்தில் இருக்கும் நாடு ரஷ்யாவாகும். முன்னர் சோவியத் ரஷ்யா என்ற பெயரில் இருந்த மிகப் பெரிய சாம்ராஜ்யம் சிதறினாலும் இப்போதும் இது இந்த மகத்தான பதாகையை தக்கவைத்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# நிழலும் நிஜமும்

நளீமா கன்சுல் கரீம்
தெல்தோட்டை

''நாநா டீ''

''வெச்சிட்டு போங்க''

''நானா இந்த சித்திரம் அழகா இருக்கா? நானே வரஞ்சது''

''கொஞ்சம் சும்மா போங்களே சஸ்னா'' நளீமின் குரல் கொஞ்சம் கடுமையாகத்தான் இருந்தது. பலத்த ஏமாற்றத்துடன் திரும்பி வந்தாள் சஸ்னா. தன் உற்ற நண்பனை பிரிவால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் நளீமுக்கு தன் தங்கையின் பாசம் விளங்கவில்லை என்றுதான் கூற வேண்டும்.

ஆம்... தன் ஒரேயொரு நண்பனான அஸ்வரின் பிரிவுதான் அது. அஸ்வர் மரணிக்கவில்லை. உயிரோடுதான் இருக்கிறார். ஆயினும், மரணத்தை விட வேதனையை நளீமுக்கு கொடுத்தது அந்த நாட்கள்.

நளீம், அஸ்வர் இருவரும் சிறு வயதிலிருந்தே ஒரு வகுப்பில் கற்ற நண்பர்கள். உயர் தரத்திற்கு பிறகு அஸ்வர் தன் நண்பனைப் பிரிந்து, கற்பதற்காக வெளியூர் சென்றான். அஸ்வரிடமிருந்து அழைப்புக்களையும் கடிதங்களையும் எதிர்பார்த்த நளீமுக்கு ஏமாற்றமே எஞ்சியது. நளீம் தன் நண்பனின் மீது வைத்திருந்த அன்பால் சொல்லொணாத் துன்பங்களை அடைந்தான். எந்த சந்தோஷமாயினும், எந்த கவலையாயினும், எந்த இரகசியமாயினும் கூட அஸ்வரிடம் மட்டுமே கூறி பழக்கப்பட்டிருந்த நளீமுக்கு அஸ்வர் இல்லாத குறை பெரும் அழுத்தத்தைக் கொடுத்தது. ஆனால், அஸ்வரோ நளீமின் அழைப்புக்கு பதிலளிப்பதோ, கடிதங்களுக்கு மறுகடிதம் எழுதுவதோ இல்லை.

தன் நண்பனின் இந்த செயற்பாடுகள் நளீமை மிகவும் காயப்படுத்தியதோடு காலப்போக்கில் அனைத்தும் சரியாகி விடும் என அவன் எண்ணினாலும், நொடிக்கு நொடி அவனது வேதனை அதிகரித்துக் கொண்டே சென்றது. இத்தனை துன்பத்தையும் சுமந்து கொண்டிருந்த நளீமுக்கு தன் தங்கையின் பாசம் எப்படி விளங்கியிருக்கும்.

தன் நண்பன்தான் எல்லாம் என நினைத்திருந்த அவனுக்கு தன் பெற்றோரோ, தன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

இரத்த உறவுகளோ, அவர்களின் அறிவுரைகளோ அவனுக்கு கசப்பாகத்தான் தெரிந்தது.

அன்றிரவு 10.00 மணி இருக்கும். எவ்வளவு முயற்சித்தும் தன் சிந்தனை ஓய்வெடுக்க மறுத்தது. நித்திரையோ அவனை எட்டவில்லை. தன் சிந்தனை தன் நண்பனின் நினைவுகளை மீட்டியவாறே இருந்தது. புத்தகம் வாசிப்பதில் அதிகம் மோகம் கொண்ட நளீம் புத்தகம் வாசிப்பதன் மூலம் தன் சிந்தனையைக் கட்டுப்படுத்த எண்ணினான். படிக்கும் மேசைக்கு அருகே சென்று புத்தகம் கிடைக்குமா என தேடலாயினான். புத்தகம் கிடைக்கவில்லை. பதிலாக பொக்கிஷம் கிடைத்தது.

ஆம்... சஸ்னா தன் கையாலேயே வரைந்த சித்திரம் அது. ஏதோ சிந்தனையில் அதனை தன் கையில் எடுத்தான். உடனே நளீமுக்கு தன் தங்கை காலையில் தன் அறைக்கு கொண்டு வந்த சித்திரம் ஞாபகத்துக்கு வந்தது.

நானாவின் தோளில் சாய்ந்து கொண்டிருக்கும் ஒரு தங்கையின் படமே அது. அப்படத்தின் அருகே ஏதோ எழுதியிருப்பதை அவதானித்தான். அதை உன்னிப்பாக வாசிக்கலானான்.

''ஏன்ட நானாவ நான் மிச்சம் நேசிக்கிறேன். அதபோல அவரும் என்னை நேசிக்கணும் என்டு எதிர்பார்க்கிறேன். ஆனா அவரு ஏன்ட அன்ப புரிந்து கொள்வதே இல்ல. யா அல்லாஹ்! ஏன்ட மௌத்துக்கு முன் ஏன்ட ஆசைய நிறைவேத்திடு. ஏன்ட நானாட மடியில படுத்து நா அழனும். நானாட தோல்ல சாய்ந்து ஏன்ட கவல எல்லாம் பகிர்ந்து கொள்ளணும். அந்த பாக்கியத்த எனக்குத் தந்திடு''

எழுத்துக்களை வட்டமிட்டிருந்த பேனா மை சாயம் அவள் அழுதிருக்கிறாள் என்பதை உணர்த்தியது. காலையில் சஸ்னா தன் சித்திரத்தை நளீமிடம் காட்டியும் நளீம் அதனை பொருட்படுத்தாததால் அவள் அடைந்த துன்பத்தால் இதனை அவள் எழுதியிருக்க வேண்டும். நெஞ்சில சோகங்களுடன் படுக்கைக்கு சென்றான் நளீம்.

அதிகாலையில் நேரத்துடன் எழுந்த நளீம் தனது தங்கைக்கு இன்ப அதிர்ச்சியை கொடுக்க எண்ணி அவளது அறையை நோக்கி செல்லும் பொழுதுதான் அவள் இரவு முழுக்க சுகயீனமுற்றிருந்தாள் என்பதை தாயின் மூலம் அறிந்து கொண்டான். தன் தங்கையுடன் மனம் விட்டுப் பேச எண்ணிய நளீம் வழமைக்கு மாற்றமாக அவன் தன் கையில் தேநீர் கோப்பையை தாங்கியவனாக சஸ்னாவின் அறைக்குள் நுழைந்தான்.

தங்கையை எழுப்ப முயற்சித்தான். ஆனால் அவள் எழவில்லை. பாவம் அவன்! தூங்கியவரை எழுப்பலாம். ஆனால் மரணித்தவரை??? கத்தினான், கதறினான், கூச்சலிட்டான்.

''ஏன் மகன் என்ன ஆச்சு?''

பரபரப்புடன் தாய் எழும்பினாள். நளீம் தன் தூக்கம் தெளிந்து எழுந்து அமர்ந்தான்.

''கனவு கண்டீங்களா மகன்? இந்தாங்க தண்ணி குடிங்க'' என தாய் தண்ணீர் கோப்பையை கையில் கொடுத்தாள். அப்போதுதான் நளீமுக்கு தெரிந்தது தான் கண்டது கனவு என்று.

ஆம்... ஓர் உறவின் முறிவுக்கு இன்னோர் உறவு காரணமாக இருக்க முடியுமா? ஒருபோதும் இல்லை. கோள்களாவன சூரியனை சுற்றி அதன் ஒழுங்கில் சுழன்று கொண்டிருக்கிறது. அதில் ஒன்று இன்னொன்றை முந்தினாலோ அல்லது அதன் ஒழுங்கை விட்டு தூரமானாலோ முழு கோள் மண்டலமும் அழிந்து விடும். அது போலவே ஒரு மனிதனை சுற்றி பல உறவுகள் சுழன்று கொண்டிருக்கின்றன. அவை ஒவ்வொன்றுக்கும் இஸ்லாம் கொடுத்துள்ள முக்கியத்துவம் கூடினாலோ அல்லது குறைந்தாலோ தனி மனிதன் மட்டுமன்றி முழு சமுகமும் அதன் விளைவை அனுபவிக்கும்.

எந்த சந்தோஷமாயினும் எந்த கவலையாயினும், எப்படிப்பட்ட இரகசியமாயினும் தன் பெற்றோருடன், இரத்த உறவுகளுடன் முதலில் பகிரும் சமுதாயமாய் எம் சமுதாயம் என்று மாறும்?

ஆமாம்... தான் கண்டது கனவு என தெளிவு பெற நளீமுக்கு நீண்ட நேரம் எடுத்தது. வாரம் ஒரு முறை ஜும்ஆ தொழவே யோசிக்கும் நளீமின் மனது அன்று ஏனோ தஹஜ்ஜத் தொழ எண்ணியது. தஹஜ்ஜத்தை வீட்டிலே தொழுதுவிட்டு தன் இரு கைகளையும் ஏந்தி இறைஞ்சினான். வழமை போலவே சஸ்னா கையில் தேநீர் கோப்பையுடன் வந்து நின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- Every Journey begins with a single step -

வாழ்க்கையெனும் குறுந்தூர ஓட்டத்தில் இடையறாது அனைவரும் ஓடிக் கொண்டிருக்கின்றோம். சாதாரண மாணவர்களாக, சாதனையாளர்களாக, சரித்திரத்தை மாற்றப் பிறந்தவர்களாக... இந்த ஓட்டம் சென்று கொண்டிருக்கின்றது. இங்கு தனது ஓட்டத்தின் மூலம் சாதித்துக் கொண்டிருக்கும் ஒரு சாதனையாளரின் உரையாடலை அகரம் உங்களுக்கு பரிசாக வழங்குகின்றது.



# இடையறாது ஓடு இலக்குகள் உன்னைத் தேடி வரும்

## குறுந்தூர ஓட்ட வீரர் ஏ.எஸ்.எம். சபான்

**சந்திப்பு: நபீல் அபாபீல்**

**அகரம்: உங்களைப் பற்றிய அறிமுகம் ஒன்றை தர முடியுமா?**

**ஏ.எஸ்.எம் சபான்:** எனது பெயர் ஏ.எஸ்.எம். சபான். நான் குருநாகல் மாவட்டத்தில் நிகவெரடிய தேர்தல் தொகுதியில் ஒட்டுக் குளம் எனும் பிரதேசத்தில் வசிக்கின்றேன். தந்தையின் பெயர் அப்துல் ஸவாஹித். தாயின் பெயர் பாதிமா சியானா. தந்தை வியாபாரியாக இருக்க, தாய் வீட்டு முகாமை செய்து எங்கள் வளர்ச்சிக்கு அருந்துணை புரிகின்றார். நான் தரம் 1 முதல் 9 வரையிலான ஆரம்பக்கல்வியை ஒட்டுக்குளம் மு.வி. யில் பூர்த்தி செய்த பின்னர், 10-13 ஆகிய தரங்களுக்கான கல்வியை நிக/அபுக்காகம மு.ம.க. யில் மேற்கொண்டேன்.

**அகரம்:** இந்த விளையாட்டுக்கும் உங்களுக்குமான நட்பு எவ்வாறானது?

**ஏ.எஸ்.எம் சபான்:** குறுந்தூர ஓட்ட வீரரான நான் எனது வாழ்வின் இணை பிரிக்கமுடியாத ஓர் அம்சமாகவே அதனை கருதுகின்றேன். 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஆகியவைதான் எனது போட்டி களாகும். 2013 -2017 வரையான காலப் பகுதியில் தேசிய மெய்வல்லுநர் மற்றும் சேர் ஜோன் டாபட் போட்டிகளில் 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் போட்டிகளில் முறையே முதலாம், இரண்டாம் இடங்களை பெற்றுள்ளேன். பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளிலும் 200



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீற்றர் போட்டியில் முதல் இடத்தையும் 100 மீற்றர் போட்டியில் இரண்டாம் இடத்தையும் வெற்றி பெற்றுள்ளேன். 2018ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய கனிஷ்ட மட்ட போட்டியில் போட்டி சாதனையுடன் முதல் இடத்தையும் பெற்றுக் கொண்டேன். அதே போட்டியில் 100 மீற்றர் போட்டியில் முதல் இடத்தையும் வெல்ல முடியுமானதாக இருந்தது.

**அகரம்:** இந்த சாதனையின் நிழலில் யாருக் கெல்லாம் நன்றி கூறுவது சாலப்பொருத்தம் என கருதுகின்றீர்கள்?

**ஏ.எஸ்.எம் சபான்:** முதலாவது என்னை படைத்து, இத்தகைய அற்புதமான திறமைகளை தந்த அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும். அடுத்த தாக இத்தனை தூரம் நான் சாதிக்கவும் வெல்லவும் காரணமாகவும் அடிப்படையாகவும் இருந்த எனது தாய், தந்தை இருவருக்கும் என்றென்றும் எனது நன்றி உரித்தாக வேண்டும். அவர்கள் இல்லாமல் நான் இல்லை. அதேபோல எனது இரு பாடசாலைகளினதும் அதிபர்கள் ஆசிரியர்கள் உட்பட எனது அனைத்து நண்பர்களும் என்னை ஊக்கமூட்டி உயர்வடைய வழி வகுத்தார்கள். அதேபோல எனது பயிற்சியாளர் பீரிஸ் மற்றும் நிக/அபுகாகம மு.ம.க. யின் பயிற்சி ஆசிரியர் எஸ்.ஏ. ரஹ்மதுல்லாஹ் அவர்களுக்கும் நான் விஷேடமாக நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

**அகரம்:** இந்த நெடுந்தூர ஓட்டத்தில் நீங்கள் சந்தித்த சவால்கள் எவை?

**ஏ.எஸ்.எம் சபான்:** விளையாட்டையும் கல்வியையும் சமமாக கொண்டு செல்வதே எனக்கு ஏற்பட்ட தலைமை சவாலாக காணப்பட்டது. இரண்டையும் சமாந்தரமாக கொண்டு செல்ல என்னால் முடிந்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டேன்.

**அகரம்:** எதிர்கால இலட்சியம்?

**ஏ.எஸ்.எம் சபான்:** எனது எதிர்கால இலட்சியம் ஒன்றுதான். தேசிய மற்றும் ஆசிய போட்களில் வெற்றியடைந்து தேசத்திற்கு பெருமை சேர்ப்ப தாகும். எனது இலட்சியத்தை நோக்கி படிப்படியாக நகர்ந்து கொண்டிருக்கும் என்னையும் உங்கள் பிரார்த்தனையில் இணைத்துக் கொள்வீர்கள் என நம்புகின்றேன்.

**அகரம்:** உங்களை முன்மாதிரியாக கொள்ளும் மாணவர்களுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்?

**ஏ.எஸ்.எம் சபான்:** உங்கள் அனைவரிடமுமம் திறமைகள் மறைந்திருக்கின்றன. இடையறாது முயற்சி செய்யவும். எட்டுத்திசைகளிலும் வெற்றிக்கொடி நட்டலாம். திறமைக்கான முயற்சி என்பது வெறும் கனவாக மாத்திரம் சுருங்கிவிடக் கூடாது. சதாவும் எம்மை உத்வேகப்படுத்தும் உணர்வூட்டும் உற்சாகமூட்டும் உன்னத ஊக்கியாகவும் அது தொழிற்பட வேண்டும். கனா காணுங்கள்! களத்தில் போராடுங்கள்!! நாளைய கதாநாயகன் நீங்கள்தான்!!




கடந்த மாதம் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்ற 56 ஆவது கனிஷ்ட மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டியில் 100 மீற்றர் ஓட்டத்தினை 10.83 செக்கனில் நிறைவு செய்து தங்கப்பதக்க கனவினை அடைந்தபோது...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பசுமை புன்னகைக்கும் இயற்கையால் அலங்கரிக்கப்பட்டுள்ளது இந்த உலகம். அமைதியாக, ஆனந்தமாக இந்த உலகில் வாழ்ந்துவிட்டு கடந்து செல்ல வேண்டிய நாம் எமது பேராசையாலும் பொடுபோக்காலும் இந்த உலகை அழித்துக் கொண்டிருக்கின்றோம். நமது நாசகார அநியாயங்களில் இருந்து இந்த பூமிப்பந்தை பாதுகாக்கும் இலக்குடன் ஒவ்வொரு வருடமும் ஜூன் 05ஆம் திகதி உலக சுற்றாடல் தினம் கொண்டாடப்படுகிறது.

### உலக சுற்றாடல் தினத்தின் உருவாக்கம்

1972 ஆம் ஆண்டு ஜூன் 05 ஆம் திகதி ஸ்டொக்ஹோம் என்ற இடத்தில் ஒன்று கூடிய ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளால் ஒருங்கே மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் ''உலக சுற்றாடல் தினம்'' பிரகடனம் செய்யப்பட்டது. முதலாவது சர்வதேச மனித சுற்றாடல் மாநாடும் ஸ்டொக்ஹோமிலேயே முதல் முறையாக நடைபெற்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது. அதைத் தொடர்ந்து 1973 ஆம் ஆண்டு முதல் உலக சுற்றாடல் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

அயாத் அஹமட்

### உலகை அச்சுறுத்தும் சூழல் பிரச்சினை

2015 ஆம் ஆண்டில் சூழல் மாசடைதல் காரணமாக 25 இலட்சம் மக்கள் பலியாகி உள்ளனர் என மாசு மற்றும் சுகாதாரம் மீதான லான்சட் கமிஷன் மருத்துவ இதழ் தெரிவித்துள்ளது. சீனாவில் மாசு காரணமாக 18 இலட்சம் மக்கள் பலியாகி உள்ளனர். உலக அளவில் எய்ட்ஸ், காசநோய் மற்றும் மலேரியா ஆகியவற்றைவிட மூன்று மடங்கு அதிகமாக சூழல் மாசடைதல் காரணமாக பலியாகும் எண்ணிக்கை 90 இலட்சமாக இருந்தது. உலகெங்கும் உள்ள அனைத்து இறப்புக்களிலும் 6 இல் ஒருவர் சூழல் மாசடைதல் காரணமாக பலியாகிறார். வளரும் நாடுகளில் அதிகபடியாக சூழல் மாசடைவதாக லான்சட் மருத்துவ இதழின் அறிக்கை தெரிவிக்கிறது.

### தொனிப்பொருள்

ஐக்கிய நாடுகள் அமைப்பின் கீழ் இயங்கும் சுற்றாடல் சபையின் (UNEP) நிகழ்ச்சித் திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவேற்றி வருகின்றது. இவ்வருடத்திற்கான






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொனிப்பொருள் ''பிளாஸ்டிக் மாசுகளிலிருந்து உலகை வெற்றிகொள்வோம்'' என்பதாகும். இத் தினத்திற்கான உத்தியோகபூர்வ நிகழ்வு இந்தியா வில் நடைபெற்றது.

**பிளாஸ்டிக்கும் இன்றைய உலகும்**

'நெகிழி' என்று தமிழில் அழைக்கப்படும் பிளாஸ்டிக் வாழ்வை இலகுவாக்க அறிமுகமா கியது. எனினும், இன்று மனித வாழ்வின் இருப் பையே கேள்வியாக்கி நகரின் அழகையும் சுற்றுச் சூழல் சுகாதாரத்தையும் பாதிக்கும் பொருளாக மாறியுள்ளது. பிளாஸ்டிக் என்பவை செயற்கை மூலக்கூறுகளால் உருவாக்கப்பட்டவை. இவை கிரேக்க மொழியில் ''பிளாஸ்டிக் கோஸ்'' என்று அழைக்கப்படுகிறது. இது ஒரு பெற்றோலியம் வகையை சார்ந்தது.

**பிளாஸ்டிக் பாவனையும் இன்றைய உலகமும்**

❖ ஒவ்வொரு வருடமும் உலகில் 500 மில்லியன் பிளாஸ்டிக் பைகள் பயன்படுத்தப் படுகின்றது.
❖ எட்டு மில்லியன் தொன் பிளாஸ்டிக் குப்பைகள் கடலில் கொட்டப்படுகிறது.
❖ ஒவ்வொரு நிமிடமும் 1 மில்லியன் பிளாஸ்டிக் போத்தல்கள் விற்பனையாகிறது.
❖ உலகில் குவியும் குப்பைகளில் 70 வீதம் பிளாஸ்டிக் குப்பைகளாகும்.
❖ நாம் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களில் 90 வீதமானவை பிளாஸ்டிக்காக காணப்படு கிறது.
❖ உலகில் பயன்படுத்தப்படும் குப்பைகளில் 7 வீதம் மட்டுமே மீள் சுழற்சிக்கு உட்படுத்தப் படுகிறது.
❖ வளர்ச்சி அடைந்த நாடுகளில் ஒரு நபர் ஆண் டுக்கு சராசரியாக 25 கிலோ பிளாஸ்டிக் பொருள் களைப் பயன்படுத்துகிறார்.

**பிளாஸ்டிக்கின் தீமைகள்**

❒ பசு, நாய், கால்நடைகள், வனவிலங்குகள் போன்றவை உணவுடன் (வீணாகும் உணவு) பிளாஸ்டிக் குப்பையை உட்கொள்வதால் உணவுக் குழாய் அடைபாட்டினால் துன்புறவும் மரணமடையவும் ஏதுவாகிறது.
❒ வீட்டிலிருந்து தூக்கியெறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் மண்ணின் (உயிர்வேதியியல்) தன்மையைப் பாதிக்கிறது.
❒ நெகிழி குடிதண்ணீர் போத்தல்கள், குளிர்பான போத்தல்கள் போன்றவை எக்காலத்திலும் அழியாது. இவை சாக்கடைகள் போன்ற இடங் களில் அடைத்துக் கொண்டு பல இன்னல்களை ஏற்படுத்துகின்றன.
❒ நம் அன்றாட வாழ்வில் தூக்கியெறியப்படும் பிளாஸ்டிக் குப்பைகளினால் நுளம்பு பரவி கொடிய நோய்கள் உருவாக காரணமாகிறது.
❒ பிளாஸ்டிக் உறைகளால் அடைக்கப்பட்ட பதப்படுத்தப்பட்ட, உணவுப் பொருட்களால் உடலுக்கு பல ஊறுவிளைகிறது.
❒ கடல், நீர்நிலைகள், கழிவுச் சாக்கடைகள் போன்ற இடங்களில் நெகிழி பைகளால், கழிவுநீரில் தேக்கம் ஏற்பட்டு புதிய நோய்கள் பரவவும், சுகாதாரக் கேடு உருவாகவும் பிளாஸ்டிக் காரணமாகிறது.
❒ பிளாஸ்டிக் பைகள் மற்றும் தூக்கி எறியப்பட்ட பிளாஸ்டிக் பேக் என்பன மழைநீர் ஊடுருவி நிலத்தடி சென்றடைய இடையூறாக உள்ளது.
❒ பதப்படுத்தப்பட்ட மற்றும் பிளாஸ்டிக்கில் அடைக்கப்பட்ட உணவுப் பொருட்கள் உடல் ஆரோக்கியத்தை பாதிக்கிறது.

**தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள்**

❍ அன்றாட வாழ்வில் உபயோகப்படுத்தப்படும் பிளாஸ்டிக் தட்டுகள், டம்ளர்கள், பிளாஸ்டிக் கப்புகள் மற்றும் பிளாஸ்டிக் சார்ந்த பொருட் களை தவிர்த்தல் வேண்டும்.
❍ பிளாஸ்டிக் பொருட்களை கண்ட இடத்தில் எரித்தல் கூடாது.
❍ பிளாஸ்டிக் மறுசுழற்சி, மறு பயன்பாடு

உலகின் புன்னகை நீடிக்க வேண்டும் என்றால் இதன் வளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அதன் முதற் படியாக முதன்மை எதிரியான பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் போன்றவை ஓரங்கட்டப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.எஸ்.எம். நுஸ்ரி (நளீமி, BA) | பணிப்பாளர், பிஸ்மி கிண்டகாடன், காத்தான்குடி

# தோல்விகளைக் கண்டு பயப்படாதே!

''இறப்பதற்கே எத்தனையோ வழிகள் இருக்கும் போது வாழ்வதற்கு ஒரு வழி இருக்காதா! அவமானங்களை அடைகாத்து சாதனைகளாய் பிரசவித்து விடு!''

அஜீபா எனும் கிராமத்தில் அஸ்லம் எனும் ஓர் இளைஞன் வாழ்ந்து வந்தான். அவன் சிறிய வயதிலிருந்தே வாழ்க்கையில் பல கஷ்டங்களை அனுபவித்து வந்தவன். பிறக்கும் போதே அவன் தாயை இழந்து விட்டான். தந்தை கண் காணா ஊரில் வேறு திருமணம் செய்து கொண்டார். அவனுக்கு உறவு என்று சொல்லிக்கொள்ள யாரும் இருக்கவில்லை. அவன் செய்யும் காரியங்கள் எல்லாம் தோல்வியிலேயே முடிந்ததாக அவன் எண்ணினான். பரீட்சையில் சித்தியடையாததால் படிப்பைக் கைவிட்டான். சிறு வியாபாரம் ஒன்றை தொடங்கி அதிலும் நஷ்டமடைந்தான். இதனால் மிகவும் விரக்தியடைந்து இறுதியாக வாழ்க்கை பிடிக்காமல் தற்கொலை செய்து கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்தான்.

ஆனால், அஸ்லமுக்கு எப்படித் தற்கொலை செய்து கொள்வது என்று ஒரே குழப்பமாக இருந்தது. ஊரில் உள்ள குளத்தில் பாய நினைத்தான். ஆனால், யாராவது காப்பாற்றி விடுவார்கள் என்று கைவிட்டான். தண்டவாளத்தில் படுத்து தற்கொலை செய்ய நாடினான். ஆனால் புகையிரத சத்தம் கடும் பீதியை ஏற்படுத்தி விட்டது. எனவே, கையில் சுருக்குப் போட கயிறும் அருந்துவதற்கு நஞ்சு மருந்தும் கத்தியும் எடுத்துக்கொண்டு ஊரின் எல்லைப் புறமாக சென்றான். எப்படி தற்கொலை செய்வது என திட்டமிட்டவாறே நடந்தான்.

வழியில் பாறூக் நானாவைக் கண்டான் அஸ்லம். பாறூக் நானா பிறவியிலேயே கைகால் ஊனமுற்றவர். ஆனாலும், அவரது தன்னம்பிக்கையாலும் விடாமுயற்சியாலும் படித்து பட்டம் பெற்று இன்று ஒரு கல்லூரியை சொந்தமாக நடத்தும் அளவுக்கு முன்னேறியவர். வாழ்க்கையில் பல தோல்விகளைக் கடந்து ஜெயித்தவர். அவர் அஸ்லத்தைக் கண்டதும் அவனது நிலையைப் புரிந்து கொண்டார். நடந்த விடயங்களை கேட்டு அறிந்து கொண்டார்.

உடனே அஸ்லமைப் பார்த்து ''அஸ்லம்! வாழ்க்கை ஒரு காட்டாற்று வெள்ளம். அதில் எதிர் நீச்சல் போட்டு போராடுபவனால்தான் ஜெயிக்க முடியும். பயந்து ஒதுங்குபவன் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுவான். நபியவர்களுக்கு வாழ்க்கையில் வந்த சோதனைகளை விடவா உனக்கு வந்து விட்டது. அவர்கள் இழந்ததை விடவா நீ இழந்து விட்டாய்... வாழ்வில் அதிகம் இழப்புகளும் சோதனைகளும் வருகின்றதென்றால் நாம் இறைவனை நெருங்குகிறோம் என்று அர்த்தம். வாழ்க்கை ஒரு சக்கரம். அதில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும். துன்பம் வந்தவுடனேயே துவண்டு போய் வர இருக்கும் இன்பத்தை மறந்து வாழ்வை முடித்துக் கொள்ள முயற்சிக்கக் கூடாது. அடுத்த இன்பமும் விடிவும் வரும் என்ற நம்பிக்கையோடு தொடர்ந்து முயற்சிக்க வேண்டும். இறைவன் உனக்கு தந்த உயிரை நீயாக அழித்துக் கொள்ளும் உரிமை உனக்குக் கிடையாது. தற்கொலை பெரும் பாவம்'' என்றார்.

இதனைக் கேட்ட அஸ்லம் ''எனக்கும் தெரியும் பாறூக் நானா! ஆனால் வாழ வழியில்லையே! என்ன செய்வது?''







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றான். அதற்கு பாறுக் நானா ''அஸ்லம்.. உன் கைகளைப் பார்.கத்தி, நஞ்சு, கயிறு சாவதற்கே இத்தனை வழிகள் இருந்தால் வாழ்வதற்கு ஒரு வழி இருக்காதா? உன்னைப் படைத்த அல்லாஹ் நீ வாழ்வதற்குரிய வழிகளையும் சேர்த்துத்தான் படைத்துள்ளான். ஆனால், நீதான் வழிகளைத் தேட வேண்டும். நம்பிக்கை உடையவன், வாய்ப்பு தன்னுடைய கதவை தட்டும் வரை காத்திருப்பான். வெற்றியாளன் வாய்ப்பின் கதவையே போய்த் தட்டுவான். தன்னம்பிக்கை உடையவன், வாய்ப்புக்காக புது கதவையே உருவாக்குவான். மடையன்தான் தனக்கு தட்டுவதற்கு கதவே இல்லை என்று வாழ்க்கையை வெறுப்பான். நீ யார் என நீயே முடிவெடு அஸ்லம். இலைகள் உதிர்ந்து விட்டன என்பதற்காக மரங்கள் இறந்து விடுவதில்லை. சிறகுகள் பலமிழந்து விட்டன என்பதற்காக கழுகுகள் சோர்ந்து விடுவதில்லை. முட்டி முட்டி மோதி மோதியே முட்டைக்குள் இருந்து வெளிவருகிறது கோழிக்குஞ்சு. ஓரிரு முறைகளோடு முயற்சியை கைவிட்டிருந்தால் முட்டைக்குள்ளேயே மடிந்து போயிருக்கும் கோழி. மூச்சை விடும் வரைக்கும் முயற்சியை கைவிடக் கூடாது. யாருக்கு இல்லை கவலை? யாருக்கு இல்லை தோல்வி? அஸ்லம்! அவமானங்களை அடைகாத்து சாதனைகளாய் பிரசவித்து விடு. தோல்விகளால் வெற்றிக் கனிகளைப் பறித்து விடு... துன்பத்துடன் தான் இன்பம் இருக்கும் கஷ்டத்துடன்தான் இலேசு இருக்கும். முள் இருக்கும் செடியில்தானே அழகான ரோஜா பூக்கிறது. நெருப்பில் கிடக்கும் தங்கம் தானே நகையாகிறது. உளி பட்டு அடி பட்டு தேறும் கற்கள் தானே சிற்பமாகிறது. பட்டை தீட்டாமல் வைரம் கிடைக்குமா? மூச்சடக்காமல் முத்துக் கிடைக்குமா? முயற்சியும் தொடர் போராட்டமும் இல்லாமல் வாழ்க்கையில் வெற்றிதான் கிடைக்குமா? சோதனைகள் நம்மை பட்டை தீட்டுகின்றன. தோல்விகள்தான் நம்மை புடம் போடுகின்றன'' என்றார்.

இதனைக் கேட்ட அஸ்லமின் உள்ளத்தில் நம்பிக்கை துளிர் விட்டது. வாழ்க்கையே வாழ்ந்து பார்க்கத்தான். முட்டாள்தனமாக அதனை நாமே முடித்துக் கொள்ளக் கூடாது என்ற உறுதி அரும்பியது.

பாறுக் நானா விடவில்லை. ''அஸ்லம். ஒரு கதை சொல்கிறேன். காட்டில் ஒரு முயல் உன்னைப் போல தற்கொலை செய்து கொள்ள முடிவெடுத்தது. அதற்கும் வாழ்வில் பிரச்சினைகள் சோதனைகள்.. ஒருபக்கம் வேடன் விரட்டுகிறான். இன்னொரு பக்கம் நரி.... மறுபக்கம் புலி.. இப்படி எந்தப் பக்கம் திரும்பினாலும் முயலுக்கு எதிரிகள். சரி நான் எல்லாம் வாழத்தகுதியற்ற விலங்கு என்று முடிவெடுத்து இறுதியாக குளத்தில் குதித்து தற்கொலை செய்வது என பாய முற்பட்டது. அப் போது முயலின் வருகைக்கு அஞ்சி அங்கு குளத்தின் கரையில் இருந்த தவளைகள் குளத்துக்குள் தாவின. அப்போதுதான் முயலுக்கு புத்தி வந்தது. முயல் சிந்தித்தது... அடடா!! என்னையும் பார்த்து பயப்பட இந்த உலகில் உயிரினங்கள் உள்ளனவே. அதேபோல என்னைத் துரத்தும் வேடனுக்கும் ஓர் எதிரி இருப்பான். நரிக்கும் புலிக்கும் கூட ஓர் எதிரி இருக்கத்தான் போகிறான். அப்படியானால் நான் மட்டும் ஏன் சாக வேண்டும்? மூச்சு உள்ளவரை முயற்சித்து வாழ்வோமே என்று தன் தற்கொலை முடிவை மாற்றிக்கொண்டு தன்னம்பிக்கையோடு வாழ்ந்தது'' என்றார்.

இதனைக் கேட்டதும் அஸ்லமின் இதயத்தில் தன்னம்பிக்கை மின்சாரமாய்ப் பாய்ந்தது. பாறுக் நானா தொடர்ந்தார். ''அஸ்லம்..! தற்கொலை செய்து கொள்வதற்கு எவ்வளவு வலிமையான மனம் வேண்டும் தெரியுமா! அவ்வளவு வலிமையான மனமிருந்தால் நீ ஏன் சாக வேண்டும். வாழ்ந்துதான் பாரேன்.. தோல்விக்கு தற்கொலை தீர்வு ஆகுமா? அப்படி அதுதான் தீர்வென்றால் இந்த உலகத்தில் அங்கொரு மனிதரும் இங்கொரு மனிதரும் தான் உயிர் வாழ்ந்து கொண்டு இருப்பர். எதற்காக சாக வேண்டும். ஒரு வாய்ப்பு இல்லை என்றால் நம் மூச்சுக் காற்று நின்று விடுமா என்ன? சிறிய இழப்புகளுக்காக விலை மதிப்பில்லாத இந்த உயிரை தியாகம் செய்வது முட்டாள்தனம் இல்லையா! உன்னைப் பெற்றெடுத்த தாயின் பத்து மாத தவத்தை மனசாட்சியே இல்லாமல் மறந்து போவது நியாயமா? உன் தாய்க்கூடாக இறைவன் கொடுத்த உயிரை போக்கிக் கொள்வது தகுமா? உன் உயிர் ஓர் உன்னத நோக்கத்துக்காக பறிக்கப்பட்டால் அது பெருமை. தோல்விக்கு அஞ்சி நீயே அதனை பறித்துக்கொண்டால் அது இழுக்கு'' என்றார்.

இதனைக் கேட்ட அஸ்லம் தன்னம்பிக்கையோடு இனி என்ன நடந்தாலும் வாழ்க்கையோடு மோதிப் பார்த்து வெற்றியடைவது என உறுதி கொண்டான். பாறுக் நானாவுக்கு நன்றி செலுத்தி விட்டு மிகவும் நம்பிக்கையோடு புகையிரத நிலையத்துக்குச் சென்றான். தண்டவாளத்தில் படுத்து உயிர் துறக்க அல்ல. புகையிரத நிலையத்தில் தன் புது வியாபாரத்தை ஆரம்பிக்க...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தரம் 6-11
தொடர் : 30

# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

எம்.எப்.எம். பாஹிம் B.A, PGDE (Merit),RICTP,MEd
(ஆசிரிய ஆலோசகர்)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

## பாடம் - 26

இணையம் அனைத்து அறிவுகளையும் உள்ளடக்கி வைத்துள்ள ஒரு கருவூலமாகும். நாளாந்தம் நவீன அறிவியல் உண்மைகள், கண்டுபிடிப்புக்கள், தகவல்கள் இணையத்தில் இற்றைப்படுத்தப்பட்டுக் கொண்டே வருகின்றது. அதே வேளை வரலாற்று, அரசியல், பொருளாதார, கல்வி, சமூகவியல் மற்றும் பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பான தகவல்கள் இணையத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

இணையத்தின் பயனர் தனக்குத் தேவையான தகவல்களை இணையத்தில் தேடும் போது குறிப்பிட்ட தகவல் தேக்கி வைக்கப்பட்டுள்ள இணையப் பக்கத்திற்குச் சென்றே பார்வையிட வேண்டும். எனவே, இவ்வாறான இணையப் பக்கங்களின் முகவரிகளை அறிந்திருப்பதே அதற்கான சிறந்த வழியாகும். எனினும், இணையப் பக்கங்களின் முகவரிகளை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்வது என்பது சிரம சாத்தியமானது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் மிகச் சிறந்த வழிமுறையாக காணப்படுவது தேடற்பொறியை (Search Engine) பயன்படுத்துவதாகும். தேடற்பொறி என்பது இணையத்தில் காணப்படும் ஒரு மென் பொருள் முறைமையாகும் (Software System).

தேடற் பொறியானது உள்ளீடு செய்த விடயங்களை குறித்த தரவுத்தளத்தில் (Data Base) இருந்து பெற்று முடிவுகளின் தொகுதியை அவற்றிற்கான தளமுகவரியோடு (website address) காட்சிப்படுத்தும்.

நடைமுறையில் காணப்படும் பிரபல்யமான தேடற்பொறிகள் பின்வருமாறு:

a. **www.google.com**
b. **www.yahoo.com**
c. **www.bing.com**
d. **www.ask.com**
e. **www.alltheweb.com**
f. **search.aol.com**
g. **www.hotbot.com**




# தேடற் பொறிகளும் அதன் பயன்பாடும் (Search Engines)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றில் கூகுளைப் பயன்படுத்தி எவ்வாறு தேடல் நடவடிக்கை ஒன்றை மேற் கொள்ள முடியும் என்பதை இன்றைய பாடத்தில் காண்போம்.

**கூகுள் - www.google.com**

இணைய உலாவிகளான **(Internet Browser) Internet explorer, Google Chrome, Firefoox, Safari** போன்றவற்றிலிருந்து ஒன்றை முதலில் திறந்து கொள்ள வேண்டும். பின்னர் அதனது முகவரி பட்டை **(Address Bar)** யில் **www.google.com** என்ற முகவரியை தட்டச்சிட வேண்டும். அப்போது தோன்றும் சாளரம் பின்வரும் உருவில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.




தேடலை மேற்கொள்ள **Search textbox** இல் தேவையான தேடல் சொற்களை தட்டச்சிட வேண்டும். அத்துடன் **Google Search** எனக் காணப் படும் பொத்தானை அழுத்த வேண்டும்.




உதாரணமாக, **Flowers** என்ற சொல் **Google search box** இல் இடப்பட்டுள்ளது. அதற்கான தேடல் முடிவுகள் எவ்வாறு கிடைக்கப் பெற்றுள்ளது என்பதை மேலுள்ள உருவிலிருந்து அவதானிக்க முடிகின்றது.

இங்கு காணப்படும் நீல நிறத்திலான இணைப் புக்களை **(links)** சொடுக்குவதன் மூலம் குறித்த இணையத்தளங்களை அடைந்து கொள்ள முடியும். பொருத்தமான மற்றும் மிக முக்கியமான இணைய முகவரிகள் முதல் நிலையில் ஒழுங்குபடுத்தப் பட்டிருக்கும்.




தேடலுக்கான முடிவுகளின் தொகுதி காட்டப் பட்டுள்ளதை மேலுள்ள உரு விளக்குகின்றது. பல்லாயிரக்கணக்கான தேடல் முடிவுகள் மிகக் குறுகிய காலத்தில் பெற்றுத் தரப்பட்டுள்ளது. அவற்றில் மிக முக்கியம் என கருதுவதை பயனர் தெரிவுசெய்து சொடுக்கிக் கொள்ள முடியும்.

தேடற் பொறிமூலம் கண்டுகொண்டுள்ள இணைப்புக்கள் ஒவ்வொரு பக்கங்களாக வடி வமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் பக்க இலக் கத்தை சொடுக்குவதன் மூலம் அல்லது **Next** என்ற பொத்தானை அழுத்துவதன் மூலம் பக்கங்களுக்கு நகர முடியும்.

அதே சமயம் பயனர் தேடும் தலைப்புடன் தொடர் பான தகவல்கள் அடங்கிய ஒரு பட்டியலையும் மேலுள்ள உரு காட்டுகின்றது. அவற்றைச் சொடுக்கு வதன் மூலம் அத்தலைப்புக்கள் அடங்கியுள்ள தேடற் பக்கங்களுக்குச் செல்ல முடியும்.

தேடலை மேற்கொள்கின்றபோது அதிக சொற்களை இணைத்து தேடுகின்ற போது தேவை யான தகவல்களை எளிதில் பெற்றுக் கொள்ள வாய்ப்பளிக்கும். அதே சமயம் நம்பத்தகுந்த இணை யத்தளங்களையே அடிப்படை தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**பயன்படுத்தும் போது,**

1. தேடற் சொற்கள் மிகப் பொருத்தமாக அமைதல் வேண்டும்.
2. ஒன்றுக்கு மேற்பட்ட தேடல் பொறிகளைப் பயன்படுத்த வேண்டும்.
3. அதிக நேரத்தை தேடலுக்காக செலவழிப்பது கூடாது.
4. மேற்கோள் குறியினுள் இட்டு சொற்களைத் தேட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சரம்

## நம்மை முதலில் மதிப்போம்

நம்மை பிறர் மதிக்க வேண்டும் என்று பார்க்கிறோம்
ஆனால் நம்மை நாம் மதிக்க வேண்டும் என்று
அப்போதாவது நினைத்திருக்கிறோமா!!!

நமது தோள்களுக்கு மேல் எத்தனை
பேர்களது கால்கள் இருக்கின்றன என்பதுதான்
நமது கவலை...

நமது கால்கள் எத்தனை பேர்களினது
தோள்களின் மீது நடக்கின்றன என்பதனை
ஒரு போதும் நாம் எண்ணிப் பார்ப்பதில்லை

நம்மைப் பற்றி நாம் எப்படி நினைக்கிறோமோ
அப்படியே ஆகிவிடுகிறோம்
அதே போன்று தன்னை தாமே உயர்த்திக்
கொள்ளாத எவருக்கும் இறைவன் உதவுவது என்பது
திருக்குர்ஆனின் தெள்ளிய சாரம்...

ஆகவே அடுத்தவர்கள் மதிப்பதை எதிர்பார்த்து
விடுவதை விட்டு விட்டு
முதலில் நம்மை நாமும் மதிப்போம்

**ஜீஸா அப்துல் காதர்**
**பாத்திமா ஸஹ்ரா பெ.அ.க.**
**அக்கரைப்பற்று**

## பறப்படு தோழா...

நல்லவை நினைத்து நல்லொழுக்கம் பேணி
நல்குரவு மதித்து நல்லுறவு காத்து
நற்செயல் புரிந்து நற்செய்தி கேட்டு
இல்லாருக்கு உதவி நல்லோர் மதிக்க

குறையற்ற வாழ்வு
குன்றாது இருக்க
இறையருள் கூடி
தாங்கிய கனவெல்லாம் துளிர்ந்து

தேங்கிய செயல்களெல்லாம்
தடையின்றி நடந்தேறி
வேகத்தோடு விவேகம்
வாழ்வினில் போற்றிட்டு

இறைவனை வேண்டி
புது வருடமதில்
புது யகம் படைத்திட
பறப்படு தோழா

**புதுக்கவி சஸ்னா**
**புத்தளம்**

## கல்வி

வையகமே இருள் சூழ்ந்த அன்றொரு நாளில்
ஒளியாய் எமக்களித்தான் கல்வியெனும் அறிவொளிக் கீற்றை
அறிவை ஆழ்கடலாய் மறைதுளியாய் சுடரொளியாய்
எமக்களித்தானே...

அழிவில்லா செல்வம் என்றால் கல்வி என்போமே
திருநபியின் பொன்மொழியும் கல்வி என்போமே!
வல்லோன் அழித்த அருட்கொடையும் கல்வி என்போமே!
என்றும் இணையில்லா முடிவில்லா செல்வம் என்போமே!

**அல் மு∴மினாத் பெ.அ.க.**
**குருகொட, அக்குரணை**

## பேசும் கவிதை - இல 37



- படம் சொல்லும் சேதிகளை கவிதையாக எழுதியனுப்பலாம்.
- கவிதைகள் பத்து வரிகளுக்குள் அமைதல் வேண்டும்.
- எழுதி அனுப்பப்படும் கவிதைகள் கவிதைச் சரத்தில் பிரசுரிக்கப்படுவதுடன், தெரிவு செய்யப்படும் சிறந்த முதல் கவிதைக்கு பரிசாக பெறுமதியான புத்தகம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
- கவிதைகள் தபாலட்டையில் மாத்திரமே எழுதப்படல் வேண்டும்.

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2018 ஜூன் 30**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முதலிடம் பெற்ற கவிதை

### விழித்தெழுங்கள்!!!

மனித நேயம் மறந்து
மாண்புகள் அற்று
வளர்ந்து வரும் உலகில்
வசந்தம் வேண்டின்
இன்றைய சிறார்களில்
நற்பண்புகள் ஊற்றெடுக்க
பாடுபடுவோம் சமூகமே!
விழித்தெழுங்கள்!!!

**எம்.என்.எப். நஸ்மா**
**மாவனல்லை**

## பாராட்டுக்குரிய ஏனைய கவிதைகள்

### உதவிடும் கரம்

தன் நிலை கொண்டு
தன்னை மன்னித்து விடாதே
என்பதை ஒரு நொடியில்
உணர்த்தி விட்டாயடா?
இப்பாரினில் வாழும் மூடர்களுக்கு
கடுகு சிறிது ஆனாலும் காரம்
பெரிது என்பதை
ஒரு நொடியில் காட்டி
விட்டதே இந்த சிறு குழந்தையின்
செயல்!

**டீ.வை. ஸைனப்**
**குரு/ஸாஹிரா கல்லூரி**
**குருணாகல்**

### பிஞ்சு நெஞ்சு

நேற்று இருந்த வாழ்க்கை
இன்றில்லையே தம்பி
இன்று இருக்கும் வாழ்வு
நாளை இருக்காதே தம்பி
இன்ப துன்பம் மாறிடினும்
உன் பிஞ்சு நெஞ்சில்
இரக்க குணம் மாறாது தம்பி!!!

**அஸ்மா மஸாஹிம்**
**தொட்டவத்தை**

### மனிதம் உதயம்

மனிதம்
உன் போன்ற
மழலை அரும்புகளிடம்
இருந்தே
உதயமாகிறது
மரத்து விட்ட
மானிடங்களின்
இதயங்களை
இளகச் செய்கிறது
நண்பா! - உன்
மகத்தான செயல்

**ஆர்.எம். அஸ்ரீத் முஹமட்**
**பொ/அல்அஸ்ஹர் ம.வி.**
**கல்லலை, பொலன்னறுவை**

### பிள்ளாய்...

நாட்கள் சக்கர நாற்காலியில்
ஊனத்தால் கழிந்திட...
யாருமற்ற தருணமது
பெற்றேன் இறையருளை!!

**எம்.சீ.டபிள்யூ. அப்துல் காதிர்**
**உக்குவலை**

### மனித நேயம்

இன்னும் இப்பாரினில்
மனித நேயம்
உயிர்ப்புடன் உள்ளது...

**எம்.ஜே.எப். லூலூ**
**கு/அல் ஹிக்மா மு.ம.வி.**
**தித்தவெல்கால**

### உதவிடும் கரம்

ஊனம் ஒரு குறையில்லை
மனிதா! அதனை நீ
குறை என்று எண்ணாத வரை
நீயும் வென்றிடுவாய்
உன் வாழ்வுதனில்

**எம்.ஜே.எப். ஜெஸ்லா**
**கு/அல்ஹிக்மா மு.ம.வி.**
**தித்தவெல்கால**

### ஒரு பிடி மண்

பாவமதை அறியாத
நன்மையென தெரியாத
தன்னால் முடியாத
முயற்சியே
நாளைய ஊற்றுக்காய்
இன்று தோண்டிய
ஒரு பிடி மண்!!

**வ.மு. மிப்தாஸ்**
**நத்வதுல் உலமா அ.க.**
**மூதூர் 05**

### ஸதகா

பார்த்தவுடன் புன்னகைத்து
உதவி வேண்டுமா?
எனக் கேட்காமலேயே
உதவிடும்
இத்தூய வழியினது
பெயரே ஸதகா!

**ஐ.ஏ. ஹஸ்மினா**
**கிண்/பாத்திமா பெ.ம.வி.**
**முள்ளிப்பொத்தான**

### உதவி

வஞ்சகமின்றி உதவிடும்
பிஞ்சு உள்ளம் - உன்னை
வாஞ்சையுடன்
வாழ்த்துகிறேன்
எஞ்சிய நாட்களிலும் - நீ
சஞ்சலமின்றி உதவிட!

**எம்.ஐ. உமாரா**
**ஹில்கன்றி ச.பா.**
**மடவளை**

### தன்னம்பிக்கை

பிஞ்சுக்கை பிடித்திழுக்க
இரு கரம் இரு சக்கரம் பிடிக்க
முயற்சியை மூட்டை கட்டாதே!
மூச்சுக்காற்றும் நின்று விடும்.
பல வழி இருக்கின்றது
உனக்கும் எனக்கும்
தடைகளை தகர்த்தெறிய
தன்னம்பிக்கையை
தன்னிருகால் என்பேன்!

**எம்.எஸ். சாகிர் அஹமட்**
**காத்தான்குடி 06**

### சாட்சி

துள்ளித் திரியும்
வயதினிலே
பள்ளிப் பருவமதை
மறந்து
தன்னில் பட்ட உதவியதை
பிஞ்சு விரல்கள் செய்யும்
காட்சி!
காணும் கண்களை
கலங்க விட்டது ஏனோ?

**அ.வா. சஹீ**
**நத்வதுல் உலமா அ.க.**
**மூதூர் 05**

### கனியும்

உதவிக் கரம் நீட்டும்
உடன் பிறவா சோதரனே
மனிதம் வளர்க்கும்
மலர் அரும்பே
புனிதம் உன் பணி!!
இனி காய்ந்த சருகும்
கனியும்
கானலும் நீர்
சொரியும்!

**எப்.எப். பராஹ்**
**பொ/அல் அஸ்ஹர் ம.வி.**
**கல்லலை,**
**பொலன்னறுவை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரம் ஸ்போட்ஸ்

### விரைவு - உயர்வு - துணிவு




## மொஹமட் டில்சாத் தேசிய அணியில் இணைவாரா?

26 வயதான இடதுகை வேகப் பந்து வீச்சாளரான மொஹமட் டில்சாத் அண்மையில் நடைபெற்று முடிந்த மாகாண முதல்தரக் கிரிக்கெட் தொடரில், இரண்டு அட்டகாசமான இன்-ஸ்விங்கர் பந்துகளின் மூலம் தனஞ்சய டி சில்வா, கௌஷால் சில்வா ஆகியோரின் விக்கெட்டுக்களை கைப்பற்றியதற்காக அனைவராலும் பிரபலமாகப் பேசப்பட்டிருந்தார். இன்-ஸ்விங் பந்துகள் தவிர டில்சாத்தினால் யோக்கர் பந்துகளையும் பௌண்சர் பந்துகளையும் சிறப்பாக வீச முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதுவரையில் 27 முதல்தரப் போட்டிகளில் விளையாடியுள்ள டில்சாத் 68 விக்கெட்டுக்களை கைப்பற்றியிருக்கின்றார். இதில் டில்சாத்தினால் இரண்டு தடவைகள் இன்னிங்ஸ் ஒன்றில் 5 விக்கெட்டுக்கள் கைப்பற்றப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. வியக்கத்தக்க வகையில் பந்துவீசும் ஆற்றலைக் கொண்ட மொஹமட் டில்சாத்தும் தேசிய அணிக்கு வரவேற்கப்படக்கூடிய இடதுகை வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவராக இருக்கின்றார். இவருக்கு இலங்கை அணியில் சந்தர்ப்பம் கிடைக்குமா என்பது இலங்கை கிரிக்கெட் ரசிகர்களின் எதிர்பார்ப்பாகும்.

## சாஷங் மனோகர் நியமனம்




சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் (ஐ.சி.சி.) தலைமை பதவிக்கு தனி வேட்பாளராக போட்டியிட்ட தற்போதைய தலைவர் சாஷங் மனோகர் இரண்டாவது தவணைக்கு மீண்டும் தேர்வாகியுள்ளார். இந்திய கிரிக்கெட் சபையின் தலைவராக இருந்த மனோகர் 2016 இல் ஐ.சி.சி. இன் முதலாவது சுயாதீனமான தலைவராக பொறுப்பேற்றார். இந்நிலையில் அவர் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு அந்த பதவியில் நீடிக்கவுள்ளார்.

## எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த இரண்டாவது இலங்கையர்



உலகின் மிக உயரமான மலைச் சிகரமாக விளங்குகின்ற எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதலாவது இலங்கையரான ஜயந்தி குரு - உதும்பாலவுடன் எவரெஸ்ட் சிகரத்தை அடைவதற்கான பயணத்தை 448 மீற்றரினால் துரதிஷ்டவசமாக தவறவிட்ட மற்றுமொரு இலங்கை வீரரான ஜொஹான் பீரிஸ், 2 ஆவது தடவையாகவும் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்து சாதனை படைத்துள்ளார். நேபாள நேரப்படி கடந்த மாதம் (22) காலை 5.55 மணியளவில் அவர் 29,030 அடி உயரமான எவரெஸ்ட் மலையின் உச்சியை அடைந்து இச்சாதனையை நிலைநாட்டினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாணய சுழற்சி நீக்கப்படுமா?

141 வருட கால டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் கடைப்பிடித்து வந்த பாரம்பரியமிக்க நாணய சுழற்சியை டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் கைவிடுவதா என்பது குறித்து பரிசீலிக்க சர்வதேச கிரிக்கெட் பேரவை திட்டமிட்டுள்ளது.

## ஆசியா கிண்ணம் 2019 இல்




2019 ஆசிய கிண்ண கால்பந்து தொடரில் பங்கேற்கும் அணிகளை குழு நிலைப்படுத்தும் குலுக்கல் நிகழ்வு ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம்பெற்றது. இதில் பலம் மிக்க ஜோர்தான் அணி இடம்பெற்றிருக்கும் டீ குழுவில் நடப்புச் சம்பியன் அவுஸ்திரேலியா இணைந்துள்ளது. ஆசிய கால்பந்து சம்மேளனத்தினால் நடத்தப்படும் 17ஆவது ஆசிய கிண்ண கால்பந்து போட்டித் தொடர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் அடுத்த ஆண்டு ஜனவரி 5ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்த தொடரில் முக்கிய அம்சமாக, போட்டியிடும் அணிகளின் எண்ணிக்கை 16இல் இருந்து முதல் முறையாக 24ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

### இலங்கைக்குரிய பறவைகள்

இலங்கையின் ஈரவலயக் காடுகளில் பொதுவாக இவ்வகை பறவை இனங்களைக் காணலாம்.



- சாம்பல் நிறத்தலைச் சிரிப்பான்
- விஞ்ஞானப் பெயர்: Garrulax cinereifrons




## 21 ஆவது பீபா உலகக் கிண்ணம்

பீபா உலகக் கிண்ணப் போட்டிகளின் 21ஆவது போட்டித் தொடர் ஜூன் 14- ஜூலை 15 வரை ரஷ்யாவில் ஆரம்பமாகியுள்ளது. 1930ஆம் ஆண்டு தொடக்கம் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்று வருவதும் உலகில் அதிக ரசிகர்களினால் கண்டுகளிக்கப்படும் போட்டியும் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## இளையோர் ஒலிம்பிக்




மூன்றாவது இளையோர் (18 வயதுக்குட்பட்ட) ஒலிம்பிக் போட்டிகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 6ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை ஆர்ஜென்டினாவின் புவனோஸ் ஐரிஸ்ஸில் நடைபெறவுள்ளன. இந்நிலையில், குறித்த போட்டிகளுக்கு தகுதியினைப் பெற்றுக் கொள்வதற்காக தாய்லாந்தின் பெங்கோக் நகரில் ஜூன் மாதம் 3ஆம், 4ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள ஆசிய தகுதிகாண் போட்டிகளுக்காக இலங்கையிலிருந்து 8 வீரர்கள் பங்கேற்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிவுக் களஞ்சியம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில்
இடம்பெறும் அறிவுக் களஞ்சிய நிகழ்ச்சி வினாக்களின் தொகுப்பு

✍ ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd

## முதல் சுற்று (இஸ்லாம் தொடர்பான வினாக்கள்)

1. நபியவர்களின் இரு புதல்வியர்களை மண முடித்ததனால் ஹஸரத் உஸ்மான் (ரழியல் லாஹு அன்ஹு) அவர்கள் துன்னுரைன் (இரு ஒளிகளைப் பெற்றவர்) என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டார்கள். அவ்விரு புதல்வியர்களினதும் பெயர்களைக் கூறுக?
2. அது அய்யாமுல் ஜாஹிலிய்யாக் காலம். ஆயினும், கவியுலகில் இலக்கிய நயம் கவிப்பூவாய் புதுமணம் பரப்பிக் கொண்டி ருந்தது. ஆனாலும், இக்கவிகளுக்குச் சவா லாக அல்குர்ஆனில் அப்போது இறங்கிக் கொண்டிருந்த மக்கி சூராக்கள் தனக்கே உரிய தனிப்பாணியில் உலகக் கவிகளுக் கொரு கவியாகப் பிரகாசித்த வேளை, புகழ் மிக்க அரபு நாட்டுக் கவிஞனொருவன் தனது கவியை தங்க எழுத்துக்களால் எழுதி அதுவரை காலமும் கஃபாவில் தொங்க விடப்பட்டிருந்தாலும் அல்குர்ஆனின் அற்புத நடைகளுக்கு மத்தியில் இனி எக்கவியும் தலை நிமிர முடியாது என்பதையுணர்ந்து தனது புகழ்மிக்க கவியை கிழித்தெறிந்தான். அவ்வாறு செய்த அந்த அரபு நாட்டுக் கவிஞரின் பெயர் என்ன?
3. தூபான் வெள்ளத்திலிருந்து நல்லடியார் களைப் பாதுகாப்பதற்கு கப்பலைக் கட்டிய அல்லாஹுத்தஆலாவின் திருத்தூதர் யார்?
4. புனித ஹஜ் கிரியைகளின்போது பெரிய ஷைத்தானுக்கு கல் எறியும் இடம் ஜம்றத் துல் அகபா (ஜம்றத்துல் குப்றா) என்றழைக் கப்படும். நடு ஷைத்தானுக்குக் கல் எறியும் இடம் ஜம்றத்துல் வுஸ்தா ஆகும். சிறிய ஷைத் தானுக்குக் கல் எறியும் இடம் எப்பெயரால் அழைக்கப்படுகிறது?
5. கதீஜா நாயகி அவர்களின் 6 பிள்ளைகளில் இருவர் ஆண்களாவர். அவ்விருவரும் சிறு வயதிலேயே இறையடி சேர்ந்து விட்டார்கள். அவர்களின் பெயர்களைக் கூறுக?
6. ஹஸரத் ஹம்ஸா (ரழியல்லாஹு அன்ஹு), ஹஸரத் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) ஆகி யோர் இஸ்லாத்தைத் தழுவியது நபித்துவத் தின் எத்தனையாம் ஆண்டில் ஆகும்?
7. அரேபியாவில் குற்றம் புரிவோருக்கு முதன் முதலில் சிறைச்சாலை அமைத்த பெருமை இரண்டாம் கலீபா உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களையே சாரும். இந்த முத லாவது சிறைச்சாலைக்காக ஸஹாபி ஒருவரின் வீட்டை 4000 திர்ஹம்களுக்கு கலீபா அவர்கள் வாங்கினார்கள். அந்த ஸஹாபியின் பெயர் என்ன?

## இரண்டாம் சுற்று (பொது அறிவு)

1. ஒரு நாட்டின் பாராளுமன்றத்திற்குள் நுழைந்த துப்பாக்கி நபர்கள் அந்த நாட்டின் பிரதமர் உட்பட எட்டுப்பேரைக் கொலை செய்தனர். இச்சம்பவம் எந்த நாட்டில் நடைபெற்றது?
2. செம்மஞ்சள் நிறத்தைப் பெறுவதற்கு எந்த இரண்டு நிறங்களைக் கலக்க வேண்டும்?
3. நீல நிறத்தையும் மஞ்சள் நிறத்தையும் கலப்பதனால் பெறப்படும் தனி நிறம் எது?
4. உலக வரலாற்றில் முதலாவது வனவிலங்குப் புகலரண் இலங்கையின் அனுராதபுர இராச தானியில் அமைந்திருந்ததாகப் பதிவாகி யுள்ளது. இலங்கையில் யானைகளுக்கான சரணாலயம் கேகாலை மாவட்டத்தில் எந்த இடத்தில் அமைந்துள்ளது?
5. தென் மாகாணத்திலுள்ள அஹுங்கலையில் சில வருடகாலமாகத் தனியார் மிருகக் காட்சிச் சாலை ஒன்று இயங்கி வந்தது. இதனை ஸ்தாபித்தவர் பேருவளையைச் சேர்ந்த வராவார். அவர் யார்?

(விடைகள் 39 ஆம் பக்கம் பார்க்க...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைக் கதை

# உருளைக் கிழங்குப் பை

ஓர் ஆரம்ப வகுப்பின் ஆசிரியை தனது மாண வர்களுக்கு ஒரு முக்கியமான பாடம் கற்றுத் தர விரும்பினார்.

ஒவ்வொரு குழந்தையையும் ஒரு பிளாஸ்டிக் பையும் சில உருளைக் கிழங்குகளும் எடுத்து வரச் செய்தார். ஒவ்வொருவரையும் தங்களது பிளாஸ்டிக் பையில் தாங்கள் எத்தனை நபர்களை வெறுக்கிறார்களோ அத்தனை உருளைக் கிழங்குகளை போடச் சொன்னார்.

எல்லாக் குழந்தைகளும் அவ்வாறே செய்த னர். சில குழந்தைகள் இரண்டு உருளைகளும், சிலர் மூன்று கிழங்குகளும் போட்டிருந்தனர். சில குழந்தைகள் ஐந்து உருளைக் கிழங்குகளை போட்டிருந்தனர்.

ஒரு வாரத்திற்கு அந்தப் பைகளை உருளைக் கிழங்குகளுடன் தங்கள் கையிலேயே வைத்திருக்க வேண்டும் என்பதுதான் விளையாட்டு. எங்கு சென் றாலும் (குளியலறை உட்பட) பையையும் அதனுள் உருளைக் கிழங்குகளையும் எடுத்துச் செல்ல வேண்டும்.

இந்த வித்தியாசமான விளையாட்டை எல் லோரும் உற்சாகமாக ஆரம்பித்தனர். மூன்று நாட்கள் கழித்து மெதுவாக ஒவ்வொருவராக அதன் கஷ்டத்தை உணர ஆரம்பித்தார்கள். சிறிது கனமான பையை கையிலேயே வைத்திருப்பது கஷ்டமாக இருந்தது. மேலும் உருளைக் கிழங்கு அழுகிப் போய் துர்நாற்றம் அடிக்க ஆரம்பித்தது. அதுவும் ரொம்பக் கஷ்டமாக இருந்தது.

ஒரு வழியாக கஷ்டப்பட்டு ஒரு வாரத்தை முடித்தனர். ஆசிரியை ஒவ்வொருவரையும் தமது அனுபவத்தைச் சொல்லச் சொன்னார். எல்லோரும் பையை எப்போதும் தூக்கி செல்வது கடினமாக இருந்ததாகவும், அழுகிப் போன உருளைக் கிழங் கின் துர்நாற்றம் கஷ்டமளித்ததாகவும் கூறினர்.

ஆசிரியை இந்தப் பாடத்தின் அர்த்தத்தை விளக்கினார், ''அப்படித்தான் நாம் மற்றவர்களின் மீது வெறுப்பைச் சுமக்கும்போது அது நமக்குக் கடினமாகவும், அதனால் உண்டாகும் தீய எண்ணம் (துர்நாற்றம்) நமது மனத்தைக் கெடுப்பதாகவும் உள்ளது. வெறுப்பை நாம் தூக்கியெறிந்து விட்டால் நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் இருக்கலாம்.''

நாம் பிறர்மீது நம் மனதில் சுமக்கும் வெறுப் பானது நமக்கே அதிக தீங்கு செய்யும். நமது மனநிலையையும் நம்மையுமே அழிக்க முற்படும்.

---

**அறிவுக் களஞ்சியம்...**

**38 ஆம் பக்கத் தொடர்... விடைகள் (இஸ்லாம்)**

1. அன்னை ருக்கையா, அன்னை உம்முகுல்தும் (ரழியல்லாஹு அன்ஹும்)
2. வலீத் 3. நபி நூஹ் (அலை) அவர்கள்
4. ஜம்றத்துல் ஊலா (ஜம்றத்துல் ஷுக்ரா)
5. காஸிம், அப்துல்லாஹ்
6. 6 ஆம் ஆண்டில்
7. ஸப்வான் பின் உமைய்யா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள்

**பொது அறிவு**

1. ஆர்மேனியா 2. சிவப்பு, மஞ்சள்
3. பச்சை 4. பின்னவெல
5. அல்ஹாஜ் மஸாஹிம்

---

## எண்ணங்களின் வண்ணங்கள் - 30

**தலைப்பு: மழை நாள்**

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2018 ஜூன் 30**

- உங்களது சித்திரம் A4 தாள் அளவில் அமைதல் வேண்டும்.
- சித்திரங்களுக்கு பயன்படுத்தும் வர்ணம் 'சோக் கலர்' ஆக இருத்தல் வேண்டும்.
- சிறந்த மூன்று படைப்புகளுக்கு பெறுமதியான புத்தகம் வழங்கப்படுவ துடன் பாராட்டைப் பெறும் சித்திரங்களும் அகரத்தில் பிரசுரிக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொடர்புகளுக்கு:
071 445 2120



# ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை - 2018

## விளக்கம், பயிற்சி

எம். ஷஹீல் காசிம் BEd. (Hons) | அல் ஹிக்மா கல்லூரி. கொழும்பு 12

## கணிதம் எண்கோலங்கள்

**முதலாம் இரண்டாம் எண்கோலத்தினை அவதானித்து 3 வது எண்கோலத்தினைப் பூர்த்தி செய்க.**

கோலம் - 1 கோலம் - 2 கோலம் - 3

1.




2.




3.




4.




5.




6.




**தரவுகளைக் கையாளுதல்**

**தரப்பட்டுள்ள வரைபைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

விருப்பமான செல்லப் பிராணி




7. மாணவர்களில் அதிகமானவர்கள் விரும்பும் செல்லப் பிராணி எது?
..........................................................

8. பூனையை விட நாயை விரும்புவோர் எத்தனை பேர்? ..........................................

9. மிருகங்களை விரும்புகின்ற மாணவர் தொகை யாது? ..........................................

10. பறவைகளை விரும்புகின்ற மாணவர் தொகை யாது? ..........................................

11. குறைந்த எண்ணிக்கையான மாணவர்கள் விரும்பும் செல்லப் பிராணி எது?
..........................................................

12. வரைபிலுள்ள தகவல்களை அட்டவணைப் படுத்துக.

| செல்லப் பிராணி | மாணவர் எண்ணிக்கை |
|---|---|
| நாய் | ........................ |
| பூனை | ........................ |
| அணில் | ........................ |
| கிளி | ........................ |
| மைனா | ........................ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைக் கடையொன்றில் ஒரு வாரத்துக்குள் விற்பனை செய்யப்பட்ட சிறுவர் சஞ்சிகைகளின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

| நாள் | சஞ்சிகைகளின் எண்ணிக்கை |
|---|---|
| திங்கள் | 40 |
| செவ்வாய் | 30 |
| புதன் | 35 |
| வியாழன் | 25 |
| வெள்ளி | 40 |

இத்தரவுகளை வரைபில் காட்டுக.

13. அதிகமாக சஞ்சிகைகள் விற்கப்பட்ட நாள் எது? ..........................................

14. எவ்விரு நாட்களில் சமமான எண்ணிக்கையில் சஞ்சிகைகள் விற்கப்பட்டன?
..........................................

15. குறைவாக சஞ்சிகைகள் விற்கப்பட்ட நாள் எது? ..........................................

16. திங்கள், செவ்வாய் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் விற்கப்பட்ட சஞ்சிகைகள் எத்தனை?
..........................................

17. ஒரு சஞ்சிகையின் விலை ரூ. 20 எனின், திங்கட்கிழமை கிடைத்த மொத்த வருமானம் எவ்வளவு? ..........................................

## சுற்றாடல் (மரம் செடி கொடிகள்)

1. இத்தாவரத்தின் பிரதான பகுதிகளை பெயரிடுக.



1. ..........................
2. ..........................
3. ..........................
4. ..........................
5. ..........................
6. ..........................

2. உங்களுக்கு தெரிந்த மரங்கள் 6 இன் பெயர்களை தருக.

i. ..........................
ii. ..........................
iii. ..........................
iv. ..........................
v. ..........................
vi. ..........................

3. உங்களுக்கு தெரிந்த கொடிகள் 6 இன் பெயர்களை தருக.

i. ..........................
ii. ..........................
iii. ..........................
iv. ..........................
v. ..........................
vi. ..........................

4. உங்களுக்கு தெரிந்த செடிகள் 6 இன் பெயர்களை தருக.

i. ..........................
ii. ..........................
iii. ..........................
iv. ..........................
v. ..........................
vi. ..........................

5. பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| இல | உணவாகப் பயன்படுத்தும் காய் வகைகள் | உணவாகப் பயன்படுத்தும் வித்து வகைகள் | வித்துக்களை நீக்கிய பின் உணவாகப் பயன்படுத்தும் காய்கள் |
|---|---|---|---|
| 1 | .......................... | .......................... | .......................... |
| 2 | .......................... | .......................... | .......................... |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 3 | ................................ | ................................ | ................................ |
| 4 | ................................ | ................................ | ................................ |
| 5 | ................................ | ................................ | ................................ |

6. கீழே தரப்பட்டுள்ள பூவின் பகுதிகளுக்கு பெயரிடுக.




1. ..................................................
2. ..................................................
3. ..................................................
4. ..................................................
5. ..................................................
6. ..................................................
7. ..................................................

7. அடைப்பினுள் உள்ள வித்துக்களை உணவு, எண்ணைய், மருந்து வகை என வேறுபடுத்தி எழுதி அட்டவணையைப் பூர்த்தி செய்க.

நெல், வேம்பு, எள், வெந்தயம், பூண்டு, கோதுமை, ஆமணக்கு, மல்லி, கராம்பு, பயறு, குரக்கன், நிலக்கடலை

| இல | உணவு | மருந்து | எண்ணெய் |
|---|---|---|---|
| 1 | .............. | .............. | .............. |
| 2 | .............. | .............. | .............. |
| 3 | .............. | .............. | .............. |
| 4 | .............. | .............. | .............. |

# தமிழ்

**மலையகக் கிராமியப் பாடல்**

கோண கோண மலையேறி
கோப்பிப் பழம் பறிக்கையிலே
ஒரு பழம் தப்பிச்சுன்னு
உதைச்சானய்யா சின்னத்துரை



பாட்டுக்கு பணிய லயம்
பந்தடிக்க மேட்டு லயம்
பேச்சுக்கு பீலிக்கரை
வாச்சுதடா உந்தனுக்கு

பொட்டுப் பொட்டா கையெழுத்தாம்
பொன் பதிச்ச பேனாவாம்
ஆதரிச்சு பேரு போடும்
ஐயா கணக்குப் பிள்ளை

திண்ணயத் திண்ணயக் கூட்டுங்களேன்
தெருவுத் திண்ணயக் கூட்டுங்களேன்
நம்மையா கங்காணி சாஞ்சிருக்க
சருகுத் தண்ணயக் கூட்டுங்களேன்

**வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. கோப்பி பழத்தை எங்கே பறிக்கலாம்?
...............................................
2. பணிய லயம் எதற்கு ஏற்றது?
...............................................
3. பேச்சுக்கு ஏற்ற இடம் எது?
...............................................
4. பேனாவில் என்ன பதிந்துள்ளது?
...............................................
5. பெயர் போடுபவர் யார்?
...............................................
6. யார் சாய்ந்திருக்க திண்ணையைக் கூட்ட வேண்டும்? ...............................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கையெழுத்து எவ்வாறு உள்ளது?

..............................................

8. ''தெருவுத் திண்ணயக் கூட்டுங்களேன்'' என்பதிலுள்ள எழுவாய் யாது?

..............................................

9. இப்பாடல் எப்பிரதேசத்திற்குரிய பாடலாகும்?

..............................................

10. பாடலிலுள்ள அடுக்கு மொழிகள் 2 எழுதுக.

...................... ......................

11. பாடலில் இடம்பெற்ற நபர்கள் யாவர்?

..............................................

12. பின்வருவம் பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்கு சொற்களாக மாற்றி எழுதுக.

உதைச்சான் ........................

ஆதரிச்சு ........................

பதிச்ச ........................

வாய்ச்சுது ........................

13. ஒத்த சொல் தருக.

மலை ........................

பாட்டு ........................

சருகு ........................

தெரு ........................

14. எதிர்ச் சொல் தருக.

ஆதரித்தல் ........................

மலை ........................

ஏறுதல் ........................

மேடு ........................

15. ஆங்கிலப் பதம் எழுதுக.

கிராமம் ........................

மலை ........................

தெரு ........................

மேடு ........................

16. தமிழ்ப் பதம் எழுதுக.

Mountain ........................

Sweep ........................

Pick ........................

Kick ........................



**காக்கையாரே...!**

கறுப்பு வண்ண காக்கையாரே
கண்களை உருட்டி கரைகிறாய்
விருந்தில் கலந்து கொள்ளவா
விரைந்து உறவை அழைக்கிறாய்!!

ஒற்றுமையின் வலிமையை
உணர்த்த வானில் கரைகிறாய்
வண்ணக் கறுப்பே ஆனாலும்
வருத்தம் மனதில் இல்லையே!!

சுத்தம் தெருவில் செய்கிறாய்
சிறந்த தொண்டன் ஆகிறாய்
வண்ணக் குயில் குஞ்சுக்கு
வளர்ப்புத் தாயும் நீளாவாய்!!

விட்டுக் கொடுத்து வாழும்
வித்தை எங்கு கற்றீரோ?
கற்கும் சிறுவர் மனதிலே
கருத்தை விதைத்து உயர்த்துகிறாய்!!

கு.காளிமுத்து

**வினாக்களுக்கு விடை எழுதுக.**

17. காகம் உறவை ஏன் அழைக்கிறது?

..............................................

18. இப்பாடலின் மூலம் சிறுவர்களாகிய எமக்குக் கிடைக்கும் படிப்பினைகள் யாவை?

..............................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. காகம் யாரின் வளர்ப்புத் தாயாக உள்ளது?

.........................................

20. ''சிறந்த தொண்டன் ஆகிறாய்'' என்ற வாக்கியத்தின் எழுவாய் யாது?

.........................................

21. காகம் வானில் ஏன் கரைவதாகக் கவிஞர் கூறுகிறார்?

.........................................

22. பாடலிலுள்ள முன்னிலை வினைச்சொல் 2 எழுதுக.

.........................................

23. காகத்தின் விஷேட பண்பு காரணமாகக் குறிப்பிடப்படும் பெயர் என்ன?

.........................................

24. காகத்தை சிறந்த தொண்டன் என்று கவிஞர் ஏன் கூறுகிறார்?

.........................................

25. ''சிறந்த தொண்டன் ஆகிறாய்'' என்ற வாக்கியத்தை பன்மையாக மாற்றி எழுதுக.

.........................................

26. பாடலிலுள்ள பெயர் அடைமொழிகள் 2 தருக.

.................... ....................

27. ஒத்த சொல் தருக.

சுத்தம் ....................

விரைந்து ....................

அழைத்தல் ....................

சிறுவர் ....................

28. எதிர்ச் சொல் தருக.

கறுப்பு ....................

உறவு ....................

ஒற்றுமை ....................

சுத்தம் ....................

29. ஆங்கிலப் பதம் எழுதுக.

சுத்தம் ....................

காகம் ....................

சிறுவர் ....................

30. தமிழ்ப் பதம் எழுதுக.

Blank ....................

Crowing ....................

Cuckoo ....................

Quick ....................

சிந்தனைக் கதை

## ஆயிரம் கண்ணாடி மாளிகை

ஓர் ஊரில் ஒரு பெரிய மாளிகையிருந்தது. அதனுள்ளே இருந்த பெரிய வட்ட அரங்கத்தில் சுற்றிலும் ஆயிரம் கண்ணாடிகள் பதிக்கப்பட்டிருந்தன.

அந்த ஊரில் ஓர் அழகிய சிறிய நாய்க்குட்டி இருந்தது. அது எப்போதும் சந்தோஷமாகவும் சிரித்துக் கொண்டும் விளையாடிக் கொண்டும் நட்புணர்வுடனும் எல்லோரிடமும் பழகும்.

ஒரு நாள் அந்த சிறிய நாய், கண்ணாடி மாளிகைக்குச் சென்றது. படியேறிக் கதவையடைந்த நாய் மெதுவாக உள்ளே எட்டிப் பார்த்தது. சுற்றிலும் ஆச்சரியத்துடன் பார்த்தது.

என்ன ஆச்சரியம்! அந்த நாயைச் சுற்றிலும் ஆயிரம் நாய்க்குட்டிகள் அதை நட்புடன் பார்த்தன. இந்த நாய் சிரித்தது. உடனே ஆயிரம் நாய்களும் இதைப் பார்த்து சிரித்தன. நாய் மிகவும் மகிழ்ச்சியாக உணர்ந்தது.

மாளிகையை விட்டு வெளியே வரும்பொழுது, ''இது அருமையான இடம். இங்கு உள்ளவர்கள் எல்லோருமே நட்பானவர்கள். இங்கு அடிக்கடி வரவேண்டும்'' என்று எண்ணிக்கொண்டது.

அதே ஊரில் மற்றொரு நாய் இருந்தது. அது எப்போதும் சோகமாகவோ கோபமாகவோ தானிருக்கும். ஒரு நாள் அந்த நாய் மாளிகைக்கு செல்ல நினைத்தது.

படியேறிக் கதவைத் திறந்து உள்ளே நுழைந்த நாய் தன்னைச் சுற்றிலும் நட்பில்லாத எரிச்சல் பார்வை கொண்ட ஆயிரம் நாய்கள் தன்னைப் பார்த்து முறைக்கக் கண்டது. அதற்குக் கோபம் வந்தது. அந்த நாய்களைப் பார்த்து உறுமியது. உடனே ஆயிரம் கோபம் கொண்ட நாய்கள் இந்த நாயைப் பார்த்து உறுமின.

எரிச்சலுடன் வெளியே வந்தது. ''இது ஒரு மோசமான இடம். இங்கே எல்லோரும் நட்புணர்வு இல்லாத கோபக்காரர்கள். இனி இங்கே வரவே கூடாது'' என்று எண்ணியது.

இந்த உலகே நம்மை பிரதிபலிக்கும் கண்ணாடி தான். நீங்கள் இந்த உலகில் எப்படிப்பட்ட பிரதி பிம்பங்களை பார்க்கிறீர்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்களின் வண்ணங்கள் - 29

## தலைப்பு: காய்கறித் தோட்டம்

### பரிசில் பெறும் சித்திரங்கள்



எம். பௌதான்
மேமா/மது/ பலாந்தை மு.வி.



எம்.ஆர்.எம். றிஸாட்
அல் மின்ஹாஜ் மு.ம.வி.
புத்தளம்



அஸ்மா நைஸர்
கா/உஸ்வதுன் ஹஸனா மு.வி.
கட்டுகொடை, காலி

### பாராட்டுக்குரிய சித்திரங்கள்



எப். சப்னா
நிக/பன்னவ மு.ம.க



என்.டீ. ரிப்கா
அல் முர்ஷித் ம.வி.
சில்மியாபுர



எம்.ஏ.ஐ. அஸ்பா
பு/அல்மின்ஹாஜ் மு.ம.வி.
பெருக்குவட்டான், மதுரங்குளி



எம்.எப். சுமைய்யா
கே/ஸாஹிரா கல்லூரி
மாவனல்லை



எம்.ஐ. இஸாக்
அல் பஹ்ரியா ம.க.
தொடவத்த, பாணந்துறை



எம்.எஸ்.எப். சம்ரா
குரு/அல்ஹிக்மா மு.ம.வி.
தித்தவல்கால



எம்.எல்.யூ. அத்தியா
பு/கொத்தாந்தீவு மு.ம.வி.



எம்.எப்.எப். ஸுமைஹா
கா/ஸாஹிரா தே.பா.
கிந்தோட்டை, காலி



எம்.ஆர்.எப். ரீஹா
க/ஜாமியுல் அஸ்ஹர் ம.க.
உடத்தலவின்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org